உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 30 | விரோதிகிருது - ஆடி - 10—8—71 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

முதியநல் லாடி

'ஆண்டு ஒன்றுக்குத் திங்கள் பன்னிரண்டு' என்பது எல்லா நாட்டிலும், எல்லா மக்கட்கும் ஒரு வகையாகவே அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் மக்களும் அதனை அவ்வாறேதான் கொண்டுள்ளார்கள். தமிழ் மக்களது ஆண்டில் முதலாவது திங்கள், இன்று சித்திரையாகச் சொல்லப்பட்டுவரினும், 'மிகப் பழைய காலத்திலே ஆவணி தான் முதல் திங்களாக இருந்தது' என்பது பலவாற்ருல் அறியப்படுகின்றது. இரண்டிரண்டு திங்களை ஒவ்வொரு பெரும்பொழுதாகப் பிரித்து வழங்கிய தமிழ்மக்கள் ஆவணி யும், புரட்டாசியும் ஆகிய கார்ப்பொழுதை முதலாவதாகக் கொண்டிருந்தமை தொல்காப்பியத்தால் வெளியாகின்றது.

எனவே, ஓர் ஆண்டின் பிறப்பு வளர்ப்புக்களில் ஆவணி மிக இளைய திங்களும், ஆடி மிக முதிய திங்களும் ஆகின்றன. இது பற்றித்தான் போலும், பண்டைப் பெரியார் ஒருவர் ஆடித் திங்களை, "முதிய ஆடி" என்று பாடியுள்ளார்!

பெரும்பொழுது ஆறினையும் 'மழை, பனி, வெயில்' என்று மூன்றாகத் தொகுத்தால், இறுதியில் நிற்பது வெயிற் காலமாகும். வெயிற்காலமே 'வேனிற்காலம்' எனப் படுகின்றது. இது சித்திரையில் தொடங்கி ஆடியில் முடிவதாகும். ஆகவே வேனிற்காலம் இளமைப் பருவத்துடன் வலிமையுற்று நிற்பது 'சித்திரை, வைகாசி' என்னும் இரு திங்களிலுமாகும். அதனால் அக்காலம், 'இளவேனிற்காலம்' எனப்படுகின்றது. எனவே, வேனிலின் முதுமைக் காலமாகிய ஆனியும் ஆடியும் முதுவேனிலாதல் சொல்ல வேண்டா. இது பற்றித்தான் முற்கூறிய பெரியவர் ஆடித் திங்களை' 'முதிய ஆடி' என்று பாடினாரோ, என்னவோ!

எப்படிப்பட்டவரும் இளமையில் எப்படி இருப்பினும், முதுமையில் நல்லவர்களாக மாறிவிடுவது உண்டு. ஆகவே, ஓர் ஆண்டுக் காலம் அதன் தொடக்கமாகிய இளமையில் எப்படி இருப்பினும், முதுமையாகிய ஆடித் திங்களில் நல்லதாகவே இருக்கும் என்று கருதித்தான் அந்தப் பெரியவர் ஆடி மாதத்தை. "முதிய ஆடி" என்றதோடு அமையாமல், "நல் லாடி" என்றும் கூறினர் எனலாம்.

குடும்பங்களில் ஆண்டில் முதியவராய் இருப்போர், தங்கள் வாழ்க்கையில் தாங்கள் எப்படி இருந்திருப்பினும், தங்கள் அனுபவங்கள் பலவற்றைக்கொண்டு, வருங்காலச் சந்ததியார்க்கு நல்லன பலவற்றைக் கூறுவர். அம்முறையில் ஆடித் திங்களே பின்வரும் ஆண்டின் பலாபலன்களை அறிவிப்பதாகப் பல செய்திகள் வழிவழி மரபாகச் சொல்லப்பட்டு வருகின்றன.

சித்திரை மாதப் பிறப்பன்று வரும் கிழமையே, ஆடி மாதத்தின் ஐந்தாம் நாட் கிழமையாகவும் அமையும். ஆயினும் அக்கிழமையின் பயன் சித்திரை முதல்நாட் கிழமையின் பயனாகச் சொல்லப்படாமல், ஆடி மாதத்தின் ஐந்தாம் நாட் கிழமையின் பயனாகவே சொல்லப்படுகின்றது.

"ஆடிமா தம்பிறந் தைந்தாந் தினத்திலே
அரியபுத வாரம் வந்தால்,
அவ்வருடம் முப்போக மேவிளையும்"

என்று தொடங்கி, எல்லாக் கிழமைகளுக்கும் பயன் சொல்லு கின்ற பாட்டு ஒன்று உண்டு. பிற்காலப் பட்டினத்தார் பாடல் ஒன்றில்,

"வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு
சாய்ந்தென்ன வான்பிறைக்கே"

என்று வந்துள்ளது. மூன்றும்பிறை தோன்றும்பொழுது மேற்கில் தோன்றுவது இயற்கை. அவ்வாறு தோன்றும்பொழுது வடக்கும், தெற்குமாகக் காணப்படுகின்ற அதன் இருமுனைகளில் வடக்குமுனை பெரும்பாலான மாதங்களில் உயர்ந்தும், தெற்குமுனை தாழ்ந்தும் பிறை சிறிது தெற்கு நோக்கி இருப்பதுபோல் காணப்படவேண்டும். மாறி இருப்பின், நாட்டில் பஞ்சம் உண்டாகும, என்பது ஒரு கொள்கை.

"மீன்ஆடு தெற்குயர மிக்கெட்டுமே வடக்காம்;
தான்மகர கும்பஞ் சரியாக - மானேகேள்
சொன்ன படியாகச் சோமன் இரானுகில்
அன்னம் அரிதாய் விடும்"

என்பது ஒரு சோதிடப் பாட்டு. இதனுல் எல்லா மாதங்களிலுமே மூன்றும் பிறையின் நிலையை உற்றுநோக்க வேண்டும் என்பது புலனுயினும், ஆடி மாதப் பிறையை நோக்கி அவ்வாண்டின் பயனை உணர்வதே வழக்கத்தில் உள்ளது அதற்குக் காரணம் அடுத்துவரும் ஆவணி மாதமே தமிழ்நாட்டிற்கு மழை தொடங்கும் காலமாய் இருப்பதாகலாம். சித்திரை முதல் நாட்கிழமையை நோக்காமல், ஆடி ஐந்தாம் நாட்கிழமையை நோக்குதற்கும் அதுவே காரணமாகும். ஆவணியே பழங்காலத் தமிழ் ஆண்டுத் தொடக்கம் என்பதை முதலிலே கண்டோம். பட்டினத்தார் பாடல் பங்குனி, சித்திரை மாதங்களில் பிறை வடகோடுயர்ந்தும், தென்கோடு சாய்ந்தும் இருந்ததைக் கண்டு கவலையுற்ற மக்களுக்கு இறைவன் திருவருள் துணையை எடுத்துக் கூறி அறிவுறுத்தியதாக உள்ளது.

ஊரைக் காக்கின்ற காவல் தெய்வங்கள், மனைத் தெய்வங்கள் முதலாக உலகப் பயனைத் தரும் தெய்வங்கட்குச் செய்யும் வழிபாடுகள் பலவும் ஆடித் திங்களிலேயே நடைபெறுவது, அடுத்த ஆண்டு நல்லதோர் ஆண்டாக அமையவேண்டும் என்று வேண்டிக்கொள்ளும் கருத்தினாலே போலும்! இவையெல்லாம் நோக்கியே முன்னர்க் குறிப்பிடப்பட்ட பெரியவர் ஆடியை "நல்லாடி" என்றார் என்றும் நினைக்கத் தோன்றுகின்றது. ஆயினும், அவர் இந்தச் சிறு சிறு செய்திகளை எல்லாம் வைத்து ஆடியை 'நல்லாடி' என்றதாகத் தெரியவில்லை. அதனைக் கூறியவர் சிவநெறிப் பற்றுமிக்க ஒருவர் என்பது தெளிவு.

இப்பொழுதுள்ள முறையில் தமிழ் ஆண்டுத் தொடக்கம் சிவநெறித் தொடக்கமாக அரும்பி, 'சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி' என்னும் நான்கு மாதங்களிலும் இடைவிடாது வளர்ந்து மலர்ந்து முதிர்கின்றது. அஃதாவது சமயாசாரியர் நால்வரது திருநாட்கள் அந்நான்கு மாதங்களிலும் தொடர்ந்து வந்து, சிவநெறியாளரைச் செந்நெறிப் படுத்துகின்றது. அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் என்னும் முறையில் அந்நான்கு மாதங்களிலும் அவரவர் திருநாட்கள் வருகின்றன. இறுதியில் வருவது சுந்தரர் திருநாள். அவரே திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்த வகையில், சிவநெறிப் பெரியார் பலரது வரலாற்று நூலின் முதலாசிரியராவர். ஆகவே, பிற்காலத்திலும் "மன்றுளார் அடியாரவர் வான்புகழ் உலகெலாம் எங்கும் நிலவி நிற்பது" அவராலேயாம். ஆகவே அவரது திருநாளைக் கொண்ட ஆடித் திங்களை, அப்பெரியவர் சிவநெறியின் முதிர்ச்சி வாய்ந்த நல்ல திங்களாகக் குறிப்பிட்டார். சமயாசாரியர் நால்வரது திருநாட்களும் மேற்குறித்த நான்கு மாதங்களிலும் தொடர்பாக வருதலை அப்பெரியவர் பாடிமகிழ்ந்த பாடல் பின்வருவது:

சித்திரைச் சதயத்(து) அப்பர், சிறந்த வைகாசி மூலத்(து)
அத்தரைப் பணிசம் பந்தர், ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாத வூரர், முதியநல் லாடி தன்னில்
சுத்தமாஞ் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

இவ்வாறு பாடி மகிழ்ந்த அப்பெரியார் இன்னுர் என்பது விளங்கவில்லை.

இங்ஙனம் சிறப்புற்ற நல்லாடியே, நாவுக்கரசர் திருவையாற்றில் கயிலைக்காட்சி கண்டமாதமாகச்சொல்லப்படுகின்றது. அஃது 'ஆடி அமாவாசியைத் தினம்' எனப்படுகின்றது. ஆடி அமாவாசியையும் ஒரு சிறந்த தினமாதல் கருதத்தக்கது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்தில் சமயாசாரியர் சந்தானுசாரியர்களது திருநாட்கள் முறையாகக் கொண்டாடப்பட்டு வரினும், இந்த முதிய நல்லாடி முதிய நல்லாடியாகவே ஒரு தனிச் சிறப்புற்று விளங்கும் வகையில் இருபெரு விழாக்கள் அமைகின்றன. இவ்வாதீனத்தில் இது பொழுது அருட்செங்கோல் ஓச்சி வரும் 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணியவர்கள் கயிலைக் காட்சி கண்டதும் நாவுக்கரசர் கயிலைக்காட்சி கண்ட அந்தநாளாகவே அமைந்தது. அக் கயிலைக் காட்சி விழாவும், சேரமான் பெருமாள் முன் செல்லச் சுந்தரர், பின்னே வெள்ளை யானை மேல் திருக்கயிலைக்கு எழுந்தருளிய விழாவும் தருமையில், ஆதீன தேவஸ்தான ஓதுவார்கள் பலருடனும் புலவர்களும் பிற பெருமக்களும் சூழத் திருமுறைப் பாராயணத்துடனும், அற்புத விளக்கச் சொற்பொழிவுகளுடனும் நடைபெற்றமை அன்பர்களது உள்ளத்தை அருள் வெள்ளத்தில் ஆழ்த்தின. இத்தகைய விழாக்கள் சிவநெறியாளர் வாழும் இடங்களிலெல்லாம் நடைபெறுமாயின், சிவநெறி பெரிதும் சிறப்புற்றுத் தழைக்கும். ஆடித் திங்களுக்குப்பின் ஆவணித் திங்கள் முதலாகச் சந்தானுசாரியர்களில் மூவரது திருநாட்கள் தொடர்ந்து வர இருப்பதையும் இதுபொழுது நினைவு கூர்ந்து எதிர்நோக்குவோமாக.

சொக்கநாத வெண்பா

அனைத்துயிர்க்கும் பாசம் அறுத்துமுத்தி கூட்ட
மனத்துயரஞ் செய்தல் மருந்தோ — மனத்துயரம்
செய்யாமல் தீர்மருந்து சித்தா அறிந்திலையோ
ஐயாஎன் சொக்கநா நா. 25

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

குருவருள்

கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்

பலவகைப் பிறப்புக்களையும் ஓரறிவுயிர் முதல் ஆறறிவு ஈருகப் பிரித்து ஆறுவகையில் அடக்கினர் ஆன்ரேர். எல்லாவற்றிலும் மிகக் கீழ்ப்பட்ட 'ஓரறிவுயிர்' எனப்படுவன தாவரங்கள். எல்லாவற்றிலும் மேற்பட்ட 'ஆறறிவுயிர்' எனப்படுவர் மக்கள். ஏனைய உயிர்கட்கில்லாத ஆருவது அறிவு எனப்படுவது எது? யாதொன்றையும் ஆராய்ந்து நல்லது தீயதை உணரும் பகுத்தறிவேயாகும்.

இந்தப் பகுத்தறிவு 'சுவை ஒளி, ஊறு, ஓசை நாற்றம்' என்னும் புறப்பொருள்களாகிய ஐப்புலன்களில் 'எது நல்லது, எது தீயது' என்று பகுத்தறிவதாகாது. ஏனெனில், மனிதன் மட்டுந்தான் இதை உணர்கிருன் என்பதில்லை; எல்லா உயிர்களுந்தாம் இதை உணர்கின்றன. அஃதாவது, ஓரறிவுயிராகிய தாவரங்கள்கூட, 'நிழல் நம்முடைய வளர்ச்சிக்கு ஆகாதது' என்று தெரிந்து வெய்யிலைநோக்கியே வளர்வதைப் பார்க்கலாம். எல்லா உயிர்களுமே தங்களுக்குச் சுவையான உணவைத்தான் தேடி உண்கின்றன. சுவையில்லாத உணவு எதிரிலே கிடந்தாலும் அதை எடுப்பதில்லை இன்னும் தனக்கு உணவாகக் கூடியது, அல்லது தனக்கும் பகையானதாகிய உயிரை எப்படி மறைந்திருந்து தாக்கி அழிக்கலாம் என்பதை நன்ருக அறிந்து அழிப்பதை ஒவ்வோர் உயிரிடத்தும் காண்கின்ரேம்.

> "மடைத்தலையில் - ஓடுமீன் ஓட உறுமீன் வரும்அளவும்
> வாடி யிருக்குமாம் கொக்கு"

என்றபடி தண்ணீருக்குள் இருக்கும் மீனைக் கரையிலிருந்துகொண்டே பிடிப்பதற்குக் கொக்கு எவ்வளவு தந்திரம் உடையதாய் இருக்கின்றது. இவைகளையெல்லாம் நம் முன்னோர்கள் அறியாமலா இருந்தார்கள்? நன்ருக அறிந்

திருந்தும் அவைகளை, 'ஆறறிவு உடைய உயிர்கள்' என்று அவர்கள் கூருமையால், 'ஆருவது அறிவு' எனப்படுவது, நல்ல உணவைத் தெரிந்து உண்பது முதலாக ஐம்புலன்களை நல்ல வகையில் அறிந்து அனுபவிப்பது அன்று என்பது தெரிகின்றது.

இவைகள் ஆருவது அறிவு அல்லவாயின், மற்று எது ஆருவது அறிவு? தான் நினைக்கின்ற அல்லது செய்கின்ற செயல்கள் உண்மையிலே நல்லனவா, தீயனவா என்று அறிந்து அவைகளில் தீயனவற்றை விலக்கி நல்லனவற்றை மேற்கொள்ளுதலே ஆருவது அறிவாகும். இந்த அறிவுதான், மனிதன் தவிர மற்ற உயிர்களிடம் இல்லை. எனவே, மனிதர்களிடத்திலும் இந்த அறிவு இல்லை என்ருல், அவர்களை மனிதர் என்று அறிவுடையோர் கருதுவதில்லை.

இந்த ஆருவது அறிவு வெளிப்பொருள்களை உணர்வது ஆகாமல், அவற்றின் தன்மைகளை உள்ளத்துள்ளே வைத்து ஆராய்ந்து உணர்கின்ற உணர்வாதல் அறியத்தக்கது.

வெளிப்பொருள்களாகிய ஐம்புலன்களை அறிவதற்கு அமைந்த கருவிகளே, 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என்னும் ஐம்பொறிகள். அவற்றின் வழியே ஓடி ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலன்களை அறியும் அறிவு, புலன் அறிவாகிய புறப்பொருள் அறிவேயாகும். அந்த அறிவை 'முகக் கண்' என்றும் அவற்றை அறிவதோடு, நில்லாமல், அவற்றின் தன்மையையும் உள்ளத்துள் வைத்து ஆராய்வதை 'அகக் கண்' என்றும் சொல்வார்கள். அஃதாவது, பொருள்களை அறிவது மட்டுமல்லாமல், அவற்றின் தன்மைகளையும் நன்கறிவதே 'அகக் கண்' ஆகின்றது. ஆகவே, இந்த அகக்கண் உடையவரே 'அறிவுடையோர்' எனப்படுவர். இந்த அகக்கண் இல்லாமல் முகக்கண் மட்டுமே உடையவர்கள் அறிவிருந்தும் இல்லாதவரேயாவர். இவர்களை,

" முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆநந்தம்

என்று சிறிது கடுமையாகவே கூறுகின்றார் திருமூலர். 'ஆனந்தம்' - இன்பம். இதற்கு எதிரானது, துக்கம் அல்லது துன்பம். இன்பத்தைத்தான் எல்லாஉயிர்களும்விரும்புகின்றன. ஆனால், அந்த ஆனந்தம் அகக்கண் இல்லாதவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே அகக்கண் இல்லாதவர்கள் தங்கள் முகக் கண்ணினாலேயே ஆனந்தத்தைப் பெற முயல்கிறார்கள். முடிவில் அது அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் துக்க சகாரத்தில் - துயர்க் கடலில் கொண்டுபோய் வீழ்த்துவதாகின்றது. இது பற்றியே திருமூலர் அவர்களை 'மூடர்காள்' என்று சிறிது வன்மையாகவே கூறினார். இந்தக் கருத்தையே தான் திருவள்ளுவரும் கூறியுள்ளார். ஆனால், அவர் மிகவும் மென்மையாகக் கூறுகின்றார்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பது அக்குறள். "மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனவே 'அதனைக் காணாதது அறிவன்று' என்பது, தானே விளங்கிற்று. அஃதாவது கண்ட பொருளை அதன் பெற்றியறியாமல் கண்டவாறே காண்பது அறிவன்று என்பதாம். எனவே, மெய்ப்பொருளையும் அறியும் ஆற்றல் இல்லாதவரை, 'அறிவில்லாதவர்' என்றுதான் அவரும் கூறினார். ஆனால், அதை மிகவும் மறைமுகமாகக் கூறியுள்ளார். இதனால், 'மக்கட் பிறப்பின் பயன், யாதொரு பொருளையும்கண்டவாறே உணராது, அதனது உட்கூறுகளை-உண்மையை ஆராய்ந்து உணரப்பெறுவதே' என்பது நன்கு விளங்குகின்றது. இதற்குத் துணைசெய்வன மெய்ந்நூல்கள் - தத்துவ சாத்திரங்கள்.

தத்துவங்களில் எளியனவாக முன்னிற்பவை பஞ்ச பூதங்கள். அதனால் எல்லா நூல்களும் அவற்றைப் பரவலாக எடுத்துக்கூறும். அக்கூற்றுக்கள் தத்துவக் குறிப்பேயாகும்.

தொல்காப்பியர்

"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"

என்று மரபியலுட் கூறினர்.

திருவள்ளுவர்,

"சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்று நீத்தார் பெருமையுட் கூறினர். திருமுறைகளில் பஞ்ச பூதங்களின் குறிப்புப் பெரும்பான்மையாகச் சொல்லப்படுதல் தெளிவு. இவையெல்லாம் மக்கட்குத் தத்துவ உணர்வு இன்றியமையாதது என்னும் கருத்துடையனவேயாம்.

இந்த பஞ்சபூத ஆராய்ச்சியைத் திருமூலர் தமது திருமந்திரத்தில் ஓரிடத்தில் மிகவும் நகைச்சுவைபடக் கூறுகின்றார். நகைச் சுவையாகக் கூறினும் அதில் பஞ்சபூதங்களைப் பற்றிய சைவசித்தாந்தத் தனிச் சிறப்பு உண்மை பொதிந்திருக்கக் கூறுகின்றார்.

'கன்னிகை (மணம் ஆகாத பெண்) ஒருத்தி அவளுக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்; ஐந்து பேரும் ஐந்து தலைவர்க்குப் பிறந்தவர்; அந்தத் தலைவர்களும் அதிசயமான தலைவர்கள். அவ்வாறு அவள் ஐந்து பிள்ளைகளைப்பெற்றும் கன்னிகையாகத்தான் இருக்கின்றாள்' என்கிறார்.

"முன்னிக்கு ஒருமகன்; மூர்த்திக்கு இருவர்;
வன்னிக்கு மூவர்; வதுவைக்கு நால்வர்;
கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்; முன்னுளில்லை
கன்னியைக் கன்னியே காதலித் தானே.

கன்னி - மாயை. முன்னி - தொழில் செய்ய நினைப்பவன் அல்லது முதலில் இருப்பவன். சதாசிவன், 'முனி' (முனிவன்) என்பது நகைச்சுவை தோன்றக் கூறிய நயம். ஒருமகன் - ஆகாயம். பஞ்ச பூதங்களில் ஆகாயத்திற்கு அதிதெய்வம் சதாசிவன். மூர்த்தி - உருவத் திருமேனி உடையவன்; மகேசுவரன். 'நல்ல அழகன்' என்பது நயம். முன்னியால் ஒரு பிள்ளை உடையவளாகிய கன்னி மூர்த்தியால் இரண்டு பிள்ளைகளை உடையவளாயினள். இரண்டாவது பிள்ளை வாயு; இதற்கு அதிதெய்வம் மகேசுரன். பின்பு மூன்றுமவன் வன்னி - நெருப்புப்போன்றவன்; உருத்திரன். 'கடுமையானவன்' என்பது நயம். இவனால் மூன்றுவது பிள்ளையை

அவள் உடையவளாயினுள். அஃது தேயு. (அக்கினி) இதற்கு அதிதெய்வம் உருத்திரன். நான்காமவன் வதுவை திருமணம் செய்துகொண்டு நல்லவகையில் இல்லறம் நடத்து பவன்; 'இலக்குமியோடு இருப்பவன்' என்பது உண்மைப் பொருள். அவனுல் மேற்சொன்ன கன்னிகை நான்காவது மகனைப்பெற்று நான்கு பிள்ளைகளை உடையவளாயினுள். அம்மகனுவான், அப்பு. (நீர்) இதற்கு அதிதெய்வம் திருமால். முன் ஆள் இல்லை - அதற்குப் பின் அவள் எதிரில் ஒருவரும் வரவில்லை. ஆகவே, அவளை ஒரு பிரமசாரியே காதலித்தான், கன்னித்தன்மை யுடைமையால் பிரமசாரியையும் இங்கு 'கன்னி' என்ருர். 'பிரமன்' என்ற பெயர் பற்றியும், எப் பொழுதும் வேதம் ஓதுதல் பற்றியும் பிரம தேவனை 'பிரமசாரி' என்ருர். 'அவன் காதலித்தான்' எனவே, 'அவனுல் அந்தக் கன்னிகை ஐந்தாவது மகனைப்பெற்ருள்' என்பது விளங்கு கின்றது. ஆகவே, "கன்னிக்குப் பிள்ளைகள் (மொத்தம்) ஐவர்" என்ருர், ஐந்தாவதாகச் சொல்லப்பட்ட மகன், பிருதிவி-மண்; இதற்கு அதிதெய்வம் பிரமதேவன்

பஞ்ச பூதங்கட்கு அதிதேவர்களை இவ்வாறு கூறுவது சைவ சித்தாந்தமே. இப்படி அதிதேவர்களைச் சொல்வதற்குக் காரணம், 'மாயை சடம்; அது, தானே உலகத்தைத் தோற்று வியாது; இறைவன் தோற்றுவிக்கவே தோன்றும் என்பதற் குத்தான். இதுவும் சைவசித்தாந்தத்திற் சொல்லப்படுவதே இன்னும் உலகத்தைச் செயற்படுத்தற்பொருட்டு இறைவன், 'சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன் எனப் பஞ்ச கர்த்தாக்களாய் நிற்பன் என்பதும் சைவ சித்தாந்தமே. மேலும் நிவிர்த்தியாதி பஞ்ச கலைகளின் நுட்பமும் இதில் அடங்கியுள்ளன.

இத்துணை அரிய நுட்பங்களையெல்லாம் நகைச்சுவை யாகத் தோற்றுவித்து, பொருள்களை முகத்திற் கண்கொண்டு மட்டும் கண்டு நிறுத்திவிடாமல், அகத்திற் கண்கொண்டும் கண்டு ஆனந்தம் அடையத் தூண்டுகிருர் திருமூலர். அவர் அருளாணையின்வழி நின்று உலகம் அகத்திற்கண் கொண்டு கண்டு ஆனந்தம் அடைவதாக.

திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 30, இதழ் 8, பக்கம் 429-இன் தொடர்ச்சி)

எட்டாவது குறள்,

“ ஆசாதி யேலணவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி ”

எனவரும்.

இதன் பொருள் :- ஆசு ஆதியேல் ஆணவமலம் அனுதியாய் இல்லாமல் ஆதியாய் இடையே ஒரு காலத்து வந்தது எனின்: காரணம் என் - அவ்வாறுவந்து பற்றுதற்குக் காரணம் யாது; (காரணம் இன்றியே வந்தது எனின்,) முத்திநிலை பிணி பேசாது அகவும் - உயிர் வீடுபெற்ற நிலையிலும் அவ்வாணவத் தடை காரணமின்றியே வந்து அகப்படுத்துவதாகும்.

விளக்க உரை :- ‘அங்ஙனங் கூறுதல் கூடாமையால் ஆணவத்தை ஆதி எனல் பொருந்தாது; அனுதியேயாம்’ என்பது குறிப்பெச்சம். பேசாது - காரணம் சொல்ல ஒண்ணுத படி ‘பேசாது கவ்வும்’ எனவும் பாடம் ஓதுப. இதனுல், ஆணவம் ஆதியாகாமை வலியுறுத்தப்பட்டது.

ஒன்பதாவது குறள்,

“ ஒன்று மிகினு மொளிகவரா தேலுள்ள
மென்று மகலா திருள் ”

எனவரும்.

இதன் பொருள் :- ஒன்று மிகினும் - ஆணவ மலம் மிகுந்திருப்பினும்; உள்ளம் ஒளி கவராதேல் - உயிர் இறைவனது திருவருளைச் சிறிது சிறிதாக உணர்ந்து வருதல் இல்லையாயின்; இருள் என்றும் அகலாது - அதற்கு ஆணவம் என்றுமே நீங்காது.

விளக்க உரை : ‘வேதாகமங்களில் பல உயிர்கள் மலம் நீங்கி வீடு பெற்றமை கேட்கப்படுதலாலும், உலகத்திலும்

அறியாமையில் நின்றோர் பின்னர் அதனினின்றும் நீங்கி அறிவு பெறக் காண்கின்றோம் ஆகையாலும் உயிர் பக்குவம் முதிர முதிர ஆணவத்தினின்றும் சிறிது சிறிது நீங்கி இறைவனைச் சிறிது சிறிது உணர்ந்து முடிவில் ஆணவத் தினின்றும் விடுபட்டு இறைவனை அடையும்' என்பதாம்.

இதனால், உயிர்களின் பக்குவ முதிர்ச்சி காரணமாக ஆணவம் அவைகளை விட்டு நீங்குவதாகும் என்பது கூறப் பட்டது.

பத்தாவது குறள்,

" விடிவா மளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து"

எனவரும்.

இதன் பொருள் :- வடிவு ஆதி - உயிர்கட்கு உடம்பு முதலியன; கன்மத்து - அவைகளது வினைக்கு ஏற்ப; மாயை வந்து-மாயை யினின்றும் தோன்றி; விடிவாம் அளவும் - ஆணவ இருள் விடியும் வரையும்; விளக்கு அனைய – இருளில் உள்ளவனுக்கு விளக்குப்போல உதவுவனவாம்.

விளக்க உரை :- உடம்பு முதலியவாவன, 'உடம்பு, மனம் முதலிய உட்கருவிகள் வாழும் இடம், நுகர்ச்சிப் பொருள்' என்பன. இவை முறையே, 'தனு, கரணம் புவனம், போகம், எனப்படும். 'உலகம்' என்பன இவை நான்குமே. 'இவை மாயையினின்றும் தோன்றும்' என்றதனால், 'மாயை உலகிற்கு முதற்காரணமாய் நிற்கும்' என்பதும், 'விளக்கனைய' என்றதனால் 'மாயை ஆணவத்திற்கு மாற்றுப்பொருளாம்' என்பதும், 'கன்மத்து' என்றதனால், 'கன்மம்' உயிர்களின் இன்பத் துன்பங்கட்கு ஏதுவாய் நிற்கும்' என்பதும், பெறப் பட்டன. பிற மதங்கள் உலகத்தை அல்லது மாயையை உயிர் கட்குத் தீங்கு செய்யும் பொருளாகக் கூற, சைவ சித்தாந்தம் அதனை உயிர்கட்கு நன்மை செய்யும் பொருளாகக் கூறுதல் அறியத்தக்கது.

இவ்வொருகுறளால், ஆணவம் ஒழிந்த ஏனைய மாயை கன்மங்களாகிய இரு மலங்களின் இயல்பும் தொகுத்துக் கூறப் பட்டன.

(தொடரும்)

புறப்பாட்டும் - அறப்பாட்டும்

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி

எண்ணச் சுழற்சி :

காரண-காரியங்கட்கு உட்படா வெற்றி தோல்விகளைப் புரிந்துகொள்ள மாட்டாது மனித இனம் மருண்டுநின்றது. எதிர்பாரா வெற்றியால் விளைந்த வியப்பு: அளவற்ற முயற்சிக்குப் பின் தோன்றிய தோல்வியிற் பிறந்த சோர்வு, இவற்றிற்கு அமைதிகாண, மனிதக்கூட்டம் ஊழ் அல்லது, விதி என்ற எண்ணத்தை உருவாக்கிக்கொண்டு தேறுதல் பெறத் தொடங்கியது. புரிந்துகொள்ள முடியாத படைப்பின் நோக்கங்களைப் புரிந்து கொண்டதுபோல மனித மனம் ஊழை இருமுனைகளிலே எல்லைக் கோடாக்கி மகிழ்ந்தது. அம் மகிழ்ச்சியிலே விதிக்கு இலக்கணம் பேசி, அதன் ஆற்றல்களுக்கு அளவும் கட்டிப் பெரிதுபடுத்திச் சான்றோர்கள், அதனை எல்லையிட்டுக் காட்டினர்.

பெரும்பாலும் தனிமனித இலக்கணங்களை அறத்துப்பாலிற் பேசும் திருவள்ளுவர், ஊழ்வலிபேச ஓர் அதிகாரமே படைக்கிறார். படைத்து, "ஊழிற் பெருவலி யா உள?" என வினைத் தொடுத்துத் தனிமனிதனை வியப்பில் ஆழ்த்தும், ஊழின் பெருமையை விண்ணளாவப் புகழ்கிறார். அவர் புகழ்ச்சியின் உட்பொருளைப் புரிந்துகொள்ள நம் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றிச் சுழல்கின்றன.

தேன் நினைவு :

புறநானூற்றுப் பூங்குன்றன் நம் எண்ணத்தில் நிறைகிறார். வள்ளுவர் விடுத்த வினாவிற்கு விளக்கங்களை எத்துணைப் பேரழகோடு அவர் விளக்கிவிடுகிறார்! 'ஊழிற் பெருவலி யாவுள' என்ற வினாவின் உட்பொருளை மனிதன் தன் உள்ளத்தால் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உணரும் வல்லமை கைவரப்பெற்று, ஊழே முடிந்த பொருளென்று ஒருவன் எண்ணத் தலைப்பட்டால், அவன் சமுதாயப் பார்வை எங்ஙனம் செழிக்கும் என்ற உண்மையை நான் சொல்வேன் எனப் பூங்குன்றன் வருகிறார். வள்ளுவரின் திருவுள்ளக் கிடக்கைக்கு விரிவுரை செய்வதிலே சங்க காலச் சான்றோர்க்கிருந்த ஆர்வம் நம் நெஞ்சைத் தேனக்குகிறது. நினைவில் சுவை கூட்டுகிறது.

கணியன் பூங்குன்றன் என்ற பாராட்டுக்குரிய புறப்பாட்டுக் காரர், காலங்களைப் பிழையின்றி அறியவல்ல சான்றோர் என்பதை யும், அவர் சோதிடக் கலையிலே வல்லமை மிக்கார் என்பதை யும் அவர் பெயர்க்கு அடையாக வந்த கணியன் என்ற சொல் விளக்கிடக் காண்கின்றோம். ஊழ்தானே சோதிடக் கலையின் உயிர்நாடி! கணியன் பூங்குன்றனார் மட்டும் இதற்கு விலக்கா என்ன? அளவற்ற நம்பிக்கை பூத்த நெஞ்சோடு ஊழ்வலியைப் பெருமைப் படுத்த அவர் பேருள்ளம் விரும்புகின்றது. ஓர் கணியன் பாடிய பாட்டு: ஓர் சோதிடன் விரிக்கும் கருத்து. என்கின்ற நினைவோடு. நாம் விழிப்பாக அவர் பாடலை அசைத் துப் பார்க்கிறோம். ஏதேதோ எண்ணங்கள் நெஞ்சத்திரையில் விரிகின்றன.

பூத்தன எங்கே?

தற்காலத்தே புதிய முழக்கம் ஒன்றை நாம் கேட்கமுடிகிறது. "என்ன சொன்னார்கள் என்பது முக்கியமே தவிர, யார் சொன் னார்கள் என்பது முக்கியமல்ல" என்ற கொள்கை ஊன்ற முயலப்படுகிறது. ஒரு பார்வையிலே அது சரி என்பதுபோற் பட்டாலும், வள்ளுவர் போன்ற சான்றோர்களுக்கு அது ஒப்ப முடிந்ததாக இல்லை. என்ன சொல்லப்படுகிறது என்பதைவிட யார் சொன்னார்கள் என்பதிலே நாட்டங் காட்டுதல் வேண்டு மென்ற வள்ளுவர் உள்ளத்தை 'ஒழுக்க முடையார் வாய்ச்சொல்' என்பது போன்ற தொடர்களிலே இனங்காண முடிகிறது. அதுவும், புதிய கோணத்திலே சமுதாயத்தைப் பார்வையிடுகிற வர்கள் பார்வையைவிட, அவர்களையே நாம் ஊன்றி நோக்கி இப்பார்வையும், எண்ணமும், எத்தகு நெஞ்ச உணர்வுகளின் மேல் பூத்தன என்று ஆராயக் கடமைப்படுகிறோம்.

அற்புத எண்ணம்:

இந்தத் தொடர் முழங்கப்படாத தமிழ் மேடைகள் இன் றைக்கு இல்லை என்கின்ற நிலைமை வளர்ந்து விட்டிருப்பதை மறுத்தற்கில்லை. அது இடையறாது முழங்கப்படுகிறது என்ப தோடு கூட, தமிழ் இனத்தின் உயிர்நாடிக் கொள்கையே இத் தொடரில்தான் இருக்கிறது என்றும், இதுவே தமிழ்ப்பண்பாட் டின் தாரக மந்திரமென்றும் பேசப்படுதலைக் காண்கிறோம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

உலகத்தே மதம், மொழி, நிறம், எண்ணங்களால் வேறுபட்டுக் கிடக்கும் மனித இனம் அத்துணையையும் தம் உறவினர்களாக

வும், அவர் தம் வாழுமிடங்களை எல்லாம் தமது சொந்த ஊராக வும் கருதுகின்ற கருத்துக்குமேலே மனித மனவளர்ச்சியிலே வேறு என்ன உயர்ச்சி இருக்கமுடியும்? சமுதாயத்தை ஒரு குடும்பமாக மதிக்க அறியும் அறிவிற்குமேலே மன வளர்ச்சியிலே புதுமையும், பெருமையும் வேறில்லை. பூங்குன்றன் அந்த அற்புதமான எண்ணத்தைப் படைத்ததன் மூலம் இலக்கிய உலகத்திலே விளங்கித் தோன்றுகின்ருர். சமுதாயம் அவரைப் பாராட்டிப் போற்றிப் பண்பிற் சிறக்கிறது.

இரு செய்திகளை நாம் விளங்கிக்கொண்டோம். ஒன்று பண்பாடு ததும்பும் இச்சொற்ருெடரைக் கூறிய ஆசிரியர் அறிவு நலம் பூத்த சான்ருேர் என்பது. பிறிதோ, அவர் படைத்த கருத்தோ செந்தமிழ்மரபிற்கே சிறப்புக் கூட்டவல்லது என்பது.

சுவையான முயற்சி :

நாம் இங்கே நிதானமாக நின்று சிந்திக்க ஒன்று உண்டு. எக்கருத்தாயினும், அது எத்தகு சிறந்ததாயினும், அதைச் சொன்னவர் எவ்வளவு பெரியராயினும், அச்சமுதாயக்கருத்து எவ்எண்ணத்தின்மேல், எத்தகு மனநிலையிலே படைக்கப் பட்டது என்பது.

'யாதும் ஊரே - யாவரும் கேளிர்' என்ற தொடரை ஆள் பவர்களில் சிலரொழியப் பலர், விதியின்மீது கொண்டஅளவற்ற நம்பிக்கையால் பூத்தது இத்தொடர் என அறிவார்களா?

திருவள்ளுவர் நெறிநின்று பூங்குன்றனரின் முடிபிற்கு "முதல்" நாடுவோம்; அது ஒரு சுவையான முயற்சியாகவே அமைகிறது.

ஒரு மனிதனை 'நல்லவன்' என்று அவ்வூர் பாராட்டுகிறது. அவன் நல்லவன் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனல் ஒருவன் அவனது பண்பு நலன்களையும், உள்ளார்ந்த எண்ணங்களையும் ஆராய்ந்து அவ்வாராய்ச்சியின் முடிவில் இவன் 'நல்லவன்' என்கிருன். மற்ருெருவன் அவன் பண்பி னையோ, உளப்பாங்கையோ கருதாது, தான்பட்ட துன்பத்தைத் துடைத்தான் இவன்; எனவே இவன் 'நல்லவன்' என்கிருன்! எனவே, பொருள் ஒன்ருயினும் அது எழுந்த மனநிலையையும், அதற்கான அடித்தளங்களையும் ஆராய்வது அறிவாராய்ச்சிக்குப் பெருமை சேர்ப்பது.

'ஊழிற் பெருவலி யாவுள' என்ற வினவிற்கு 'ஆம்' அதுவே பெருவலி உடையது என்று உடன்படுகிருர் பூங்குன்ற

ளர். மூவகை அளவுகளிலே ஆகம அளவையான நூலளவை யானே அதனை அறிந்தேன் என்று வெளிப்படுத்துகின்றார். அந்த ஊழின் பெருவலி எப்படிப்பட்டது என்பதனை ஒரு உவமை காட்டி விளக்குகிறாரே அங்கே பூங்குன்றனாரின் பேரறிவும் நுண்மையும் பிறங்கித் தோன்றுகின்றன.

பூங்குன்றன் சித்திரம் :

'ஊழ் என்ற பேராற்று நீரில் மிதக்கும் சிறு தெப்பக்கட்டை போன்றன உயிர்கள்' என்பது பூங்குன்றனாரின் உவமைப் பொருள். ஆற்றின் போக்கில் விடப்பெற்ற மரப்புணை, தண்ணீரின் செலவிலேயே தன் போக்கினை அமைத்துக் கொள்ளுவதே தவிர, தனக்கெனத் தனிப்பாதை வகுக்கவல்லமை அற்றது. அதுபோல, உயிர்கள் ஊழ்ப்போக்கிலே செல்ல வல்லனவே தவிர, தமக்கென வல்லமை ஒன்றைத் தனியாகப் பெற்றன அல்ல என்பது உவமைதரும் கருத்து.

" நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் "

என்பது பூங்குன்றன் சித்திரம்.

ஊழ்வலி பேசப் பூங்குன்றன் மேற்கொண்ட உவமை தமிழிலக்கியத்திற்குப் புதுமை ஒன்றுமில்லை. காதற்பரத்தை ஒருத்தி தலைவன் வையைப் பெருக்கில் தன்னொடு கலந்து நீராட வருதல் செய்யாது, தலைவியொடு நீராடினன் என்பதறிந்து வெகுண்டு, பின்பொருகால் அவனைக் கண்ட ஞான்று, நீ நின் ஆண்மையுடன் செயற்படும் வல்லமை உடையை அல்லை: விரைந்து செல்லும் ஆற்றுத்தண்ணீரில் போடப்பட்ட மரக் கட்டை தன்நிலை ஏதுமின்றி நீர்ச்செலவைத் தானேற்றுச் சென்றாற்போல, தலைவிக்கு அஞ்சி அவள் போக்கில் போக வல்லை என இழித்துக் கூறினள்.

" செல்யாற்றுத் தீம்புனலில் சென்மரம் போல
வவ்வுவல் லார்புணை யாகிய மார்பினை "

இது நல்லந்துவனார் காட்டும் பரிபாடல் ஓவியம்.

பூங்குன்றனும், நல்லந்துவனும் காட்டும் உவமை ஒரே தன்மைத்தாயினும் அவற்றால் விளக்கப்படும் பொருள்களிலே வேற்றுமை தெரிகிறது. தலைவிக்கு அஞ்சி அவள்வழி ஒழுகும் தலைவனை ஏளனப்படுத்தப் பரிபாடல் பேசும் உவமை பொருத்த முடையதாக இருப்பதை உணர முடிகிறது. ஆனால் பூங்குன்றன் விளக்கவரும் பொருள் வேறுபடுகிறது.

(தொடரும்)

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவில்

15—6—1971

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

பட்டணப்பிரவேசம்

அஷ்ட கஜங்களும் வணங்கி வரவேற்றல்

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தில்
17—7—'71 அன்று நிகழ்ந்த
வழியனுப்பு வாழ்த்து விழாவில்



ரஷ்யா செல்லும்,
தவத்திரு. குன்றக்குடி அடிகளார் M. L. C. அவர்களுக்கு
தருமையாதீனச் சார்பில்
அமைச்சர். மாண்புமிகு. இராசாராம் அவர்கள்
பொன்னுடை போர்த்திப் பாராட்டல்.

திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B, A,

(மலர் 30. இதழ் 8. பக்கம் 409 இன் தொடர்ச்சி)

209 புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானர்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றூர்கட்கே.

குறிப்புரை :- புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை என்பது, வறுமையுடையோர்க்கு வாழ்வு பயனற்றதாகிவிட்டது என்றபடி. அடையப்பட்டார்களும் அன்பிலரானர் என்பது, சுற்றத்தாரும் அன்பின்றி விலகிவிட்டார் என்றபடி. கொடை கோள் - கொடுக்கல் வாங்கல். வறுமையால் வாடுவார்க்குப் பிறரும் உதவமாட்டார் என்க. கொண்டாட்டமில்லை என்பது, உற்சாகம் இல்லை என்றபடி. நடையில்லை நாட்டில் இயங்குகின் றூர்கட்கே என்பது - நடைப்பிணம் போன்று திரிவார்க்கு உலகில் இடமில்லை என்றபடி.

வறுமையாளர்க்கு உலக வாழ்வு இல்லை என்பதாம். 1

210 பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே.

குறிப்புரை :- பொய்க்குழி - வயிறு. தூர்ப்பான் - நிரப்பும்படி, வினையெச்சம். புலரி - சூரியன். புலர்தல் - விடிதல். அக்குழி - அவ்வயிற்றுக்குழி. பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென் றக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர் என்பது,

பொழுது விடிவதால் வயிற்றை நிரப்பவேண்டுமே யென்று அருமையான வாழ்வுக்குத் தேவையான பொருள்களைத் தேடு வோர்களே! என்றபடி. எக்குழி - இந்திரியங்கள் முதலிய பிற குழி. எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின் என்பது, எக் குழியை நிரப்பினாலும் இறைவனது பொருள்சேர் புகழைப் பாடுங்கள் என்றபடி. அழுக்கு - வினை. அக்குழி தூரும் அழுக் கற்ற போதே என்பது, பிறவிக்குக் காரணமாகிய வினை நீங்கி னால் வயிற்றுக்குழி நிரம்பிவிடும் என்றபடி. பிறவியே இல்லை யெனில் பசிப்பிணியும் இல்லையாம் என்க.

வயிற்றை நிரப்புவதற்குரிய வழியைத் தேடுவதை விட்டுப் பிறவி நீக்கத்துக்கான வழியைத் தேடவேண்டும் என்பதாம். 2

211 கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே.

குறிப்புரை :- கற்குழி - வயிறு. கற்குழி தூரக் கனகமுந் தேடுவர் என்பது, வயிற்றுக் குழியை நிரப்புவதற்குப் பொன் னைத் தேடுவார்கள் என்றபடி. அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது என்பது. அவ் வயிற்றுக்குழியைக் குறையாது நிரப்பு வது யாவர்க்கும் கடினம் என்றபடி. அக்குழி தூர்க்கும் அறிவா வது, திருவடிஞானம். அக்குழி தூரும் அழுக்கற்றவாறே என்பது, திருவடி ஞானம் பெற்றபின்னர் பிறவிநீங்கி வயிற்றுப் பிணியும் நீங்கும் என்றபடி.

நிலையில்லாத பொருளை நாடாது நிலையுடைய பொருளை நாடினால் மலமாசு நீங்கும் என்பதாம். 3

212 தொடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய
கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே
உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.

கு - ரை :- தொடர்ந்தெழு சுற்றம் - ஏழு பிறவியிலும் தொடர்ந்துவரும் சுற்றம். உடலுக்கு உறவாகிய சுற்றத்தோடு உயிருக்கு உறவாகிய இந்திரியங்களையும் கொள்க. தொடர்ந் தெழு சுற்றம் வினையினுந் தீய இச் சுற்றங்கள் வினையைக் காட்டி லும் தீமை செய்வன என்றபடி. கடந்தது - கடந்து, வினை

யெச்சம். கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே என்பது, வாழ் நாளைக் கடந்து உயிர் உடலைவிட்டு நீங்குவதற்கு முன்னே என்றபடி. உடந்து - மாறுபட்டு. உணர்வு - இறை நினைவு. உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றி என்பது, உலகப் பொருளை விட்டு மாறுபட்டு உண்மைப் பொருளை நாடி என்ற படி. தொடந்து நின்றவ்வழி தூர்க்கலு மாமே என்பது, நீங்கா திருந்து பிறவிக்குழியைத் தூர்ப்பதோடு பசிப்பிணியையும் போக்கலாம் என்றபடி.

உணர்ச்சியாகிய விளக்கினை ஏற்றி உறவாகிய இருளைப் போக்கலாம் என்பதாம். 4

213 அறுத்தன ஆறினும் ஆனின மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே.

கு - ரை :- ஆறு - ஆறத்துவா. அவையாவன வன்னம், பதம், மந்திரம், தத்துவம், கலை, புவனம் ஆகிய ஆறு. அறுத்தன ஆறினும் ஆனின மேவி என்பது, ஆறு அத்துவாவின் வழியாக உயிர்க்கூட்டம் வினைகளை ஈட்டின என்றபடி. வன்னம், பதம், மந்திரம் ஆகியவை சொற்பிரபஞ்சம்; தத்துவம், கலை, புவனம் ஆகியவை பொருட்பிரபஞ்சம். இவை இரண்டும் இல்லையெனில் வினை இல்லை என்க. ஐவர் - ஐந்து இந்திரியங்கள். அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம் என்பது, ஐம்பொறிகளும் சுவை முதலிய பொருள்களின்மேல் சென்று உயிருக்கு எண்ணற்ற துன்பத்தைக் கொடுத்தனர் என்றபடி. ஒவ்வொரு ஆசையைப் பூர்த்திசெய்வது துன்பந்தானே! ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை என்பது, பல கொடிய வினைகள் வாழ்க்கையை வேதனைப் படுத்தின என்றபடி. வெறுத்தனன் ஈசனை வேண்டி நின்றானே என்பது, வறுமையாளன் வாழ்க்கையை வெறுத்து வறுமை நீங்கவேண்டும் என்று இறைவனை வேண்டியிருந்தான் என்றபடி.

வறுமையினின்றும் நீங்க இறைவனை ஏத்தவேண்டும் என்பதாம்.

(தொடரும்)

(கு - ரை) ஆழிமாற்கு அருளிய வரலாறு :-

நாராயணன் பூவோ ராயிரத்தைக்
கரத்தாற் கொய்தோர் அரற்கே கொடுத்து
சக்கரச் சிறுமையி னீங்கி நற்சுவை
பாற்கடற் கண்ணே பள்ளி கொண்டா னெனக்
காரக முழுதும் வந்தன காண்க.

என்பது (இலக்கணக் கொத்து).

இவ்வாழிக்குச் சுதர்சனம் என்பது பெயராம். சலந்தரனை வதைக்கச் சிவபெருமானால் வட்டமாகப் பூமியில் கிழிக்க அதனைச் சலந்தராசுரன் தன் வலிகொண்ட அளவு பூமியுடன் பெயர்க்க அது தலைமட்டாக வருமளவில் அவன் உடலைப் பிளந்தது. இஃது சிவபிரான் இடத்திலே இருப்பதனைக் காத்தற் கடவுளாகிய திருமால் கண்ணிடந்தப்பிச் சிவபிரான் அருளாற் பெற்றமை திருவீழிமிழலைப் புராணத்தாலறியக் கிடக்கும்.

இவ்வாழியின் ஆற்றலாவது :- ஆயிர முகங்களும் ஈராயிரங்கைகளும் பரந்த நிலையானதும் ஆண் உருவுற்றதும் ஈராயிரங் கண்களையுடையதும், ஆயிரங் கால்களையுடையதும் ஆகியது. திருமால் பெற்றது. சுதக்கணன் விட்ட பூதத்தின் மேல் ஏவப்பட்டது. வேழவேந்தனாகிய கசேந்திரன் பொருட்டு முதலைமேல் செலுத்தப்பட்டது. பாரதப்போரில் பகலவனை கரக்க வருவிக்கப்பட்டது. துருவாசரால் சபிக்கவும் பெற்றது. ஆம்.

படைக்கலம் - ஆயுதம். அடைக்கலம் - தஞ்சம். மறை - வேதம். மறையாகிய மனுக்களைத் தன்னகத்தே கொண்டது. புனிதம் - தூய்மை. இறைவன் - எல்லாவுயிர்களிடத்தும் சென்று தங்குபவன் என்பது. மெய்ம்மையடியார் மெய்யடியார் என வாயிற்று.

பவக்கட லழுந்தி வருந்துமென் றனக்குப் பதப்புணை
யளித்தின்ப மேவு
தவக்கட னுனக்கே நவமணி கொழிக்குந் தரங்கநீர்ப்
பொன்னியும் விசும்பார்
துவக்கட கமுஞ்சூழ் திருவையாற் றமர்ந்த தூயனே
நேயனே யறிஞர்
உவக்கட மருக மழுவணி கரனே! யும்பர்கண்
போற்றுநா யகனே. 12

(இ - ள்) நவமணி கொழிக்கும் தரங்கம் நீர்ப்பொன்னியும் - நவரத்தினங்களையும் மலையினின்று திரட்டிக்கொண்டுவந்து கரைகளில் ஒதுக்குறும் அலைகளுடன் கூடிய நீர்நிறைந்த (என்றும் வற்ருத வளமுடைய) காவிரியாறும், விசும்பு ஆர் துவம் கடகமும் சூழ் திருவையாற்றமர்ந்த தூயனே - விண்ணிற் பொருந்திய நிலைபேறுடைய கங்கையாறும் (வின்ணளவும் மேவி யுயர்ந்த மாடமாளிகையும்) (வனங்களும்) சுற்றியுள்ள திருவை யாற்றின்கண் விரும்பிக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள தூய்மையானவரே! அறிஞர் உவக்க டமருகம் மழுவணி கரனே'- புலிமுனியும் பதஞ்சலியும் (ஞானிகளும்) மனமகிழ உடுக்கையினை யும் பரசினையு ஏந்திய திருக்கைகளையுடையவரே. உம்பர்கள் போற்றும் நாயகனே - தேவர்கள் சேவிக்கும் தேவாதிதேவ ராகிய மகாதேவரே! நேயனே - அன்புருவானரே, பவம்கடல் அழுந்தி வருந்தும் என்றனக்கு - பிறவிப்பெருங்கடலில் சிக்கிய ழுந்தி கரைகாணுது வருந்துகின்ற ஏழையடியற்கு, பதப்புணை அளித்து - திருவடிகளாகிய தோணியினைத் (தெப்பம்) தந்தருளி (முத்தியங்கரையினைக் கண்டடைதற்கு). இன்பமே உதவ உனக்கே கடன் - பேரின்பத்தினையே அளிப்பதற்கு தேவ ரீருக்குகே கடப்பாடாகும்.

(கு - ரை) " பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்.
இறைவ னடிசேரா தார் "

என்பது திருக்குறளாகும். இக்குறட்கருத்தினை தழுவியது இச்செய்யுளின் ஒருபகுதியாம். கடகம் - வீடு, காடு, யாறு என்பதாம்.

நவமணி :- 1 மாணிக்கம், 2 பவழம், 3 வைரம், 4 வைதூ ரியம், 5 கோமேதகம், 6 பச்சை. 7 நீலம், 8 புட்பராகம், 9 முத்து என்பனவாம். கடலும், காடும், மலையும் ஒன்றுபட்டிருத்தலின் 'நவமணி கொழிக்கும் என்ருர். பொன்னி காவிரியிரண்டும் பொருந்து காவேரியின்பேர்" என்பது நிகண்டு. பொன்னி - காவிரியாறு; அமர்தல் - விரும்பல். டமருகமாகிய துடியோசை யினின்றும், பாணினி வியாகரணம் உண்டாயிற்று என்பர். " பரசுபாணியர் பாடல் வீணையர் " என்பது திருமறை. இறைவ னுடைய பல நாமங்களுள் மகாதேவர் என்பதும்ஒன்று. நினைப் பவர் உரைப்பவர், கேட்பவர் தம் பாவம் பறையும் என்பது உப நிடதம் கூறும் உண்மை. பவம் - பிறவி. கொழித்தல் - ஒதுக் கல். தரங்கம் - அலை. உம்பர் - மேலிடம். துவம் - அசையா நிலை. டமருகம் - துடி, வடசொல். ஏ - விளி.

கனக்கந்த ராநின் றிருவடி தொழவுங் காணவும்
வழுத்தவுங் கடையேன்
றனக்கந்த மேவாத் தன்னருள் புரிந்த தற்பரா!
பொற்பிலங் குசடா
னனக்கந்த நரல வுணக்குலந் தடிந்தோய்! நத்தின்
நித்திலம் பயின்ற
வனக்கந்த வாரி சமென்மலர் வாவி வயங்குமை
யாற்றெழி லரசே!

(இ - ள்) கனம் கந்தரா' - நீருண்ட கரிய மேகம் போன்ற கண்டமுடையவரே! (நீலகண்டர்). பொற்பு இலங்கு சடானனக் கந்தரால் - அழகுடன் விளங்கும் அறுமுகப் பரம்பொருளால், அவுண(ர்)க்குலம் தடிந்தோய்' - அமரர்தமக்கிடுக்கண் புரிந்த அசுரர் கூட்டத்தினைக் கொன்று குவித்தவரே! நத்தினம் நித்திலம் பயின்ற - சங்கினங்கள் முத்துக்களை யீன்ற, வனம் கந்தவாரிசம் மெல்மலர் வாவி வயங்கும் ஐயாற்று எழில் அரசே- நீர்நிறைந்த நறுமணங் கமழும் மெல்லிய தாமரை மலர்கள் சூழ்ந்து விளங்கும் திருவையாற்றுப் பெரும்பதியில் கோயில் கொண்டெழுந்தருளிய அழகிய சிவராசரே! நின் திருவடி தொழவும், காணவும், வழுத்தவும் கடையேன் தனக்கு - தேவரீரு டைய திருவடிகளை வழிபடவும் தரிசிக்கவும் வாழ்த்தவும் கடைப் பட்டவனாகிய எனக்கு, அந்தம்மேவா தண் அருள் புரிந்த தற்பரா - முடிவிலா இன்பமளித்தருள்பாலித்த மகாதேவரே (ஞானமயமானவரே) காத்தருளல் வேண்டும். (எ - று)

(கு - ரை) சட்ஆனனம் - ஆறுமுகம். கந்தர் - பொருத்திச் சேர்க்கப்பெற்றவர். பொற்பு - அழகு. தடிதல் - கொன்று குவித்தல். நந்து - நத்தென வலித்தல் பெற்றது. வாரிடம் - நீரிற்றோன்றுவது (தாமரை). கந்தம் - மணம். தண்ணருள் - முத்தியம் பொருள். வனம் - நீர், அசுரர்களை யழிக்கும் பொருட்டே கந்தலோகத்திலிருந்து கந்தப்பெருமான் திருவவ தாரம் புரிந்தமை கந்தபுராணத்தால் அறியக்கிடக்கும். பாற்கடல் கடைந்த ஞான்று வாசுகி கக்கின ஆலகாலத்தினை யருந்தினமை யால் நீலகண்டமாயிற்று. விடத்தினை மிடற்றிலடக்கினமை தேவர்களைக் காத்தற்பொருட்டாம்.

(தொடரும்)

உ

குருவே துணை

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு

விண்ணப்பம்

திரு. சி. மீனுக்ஷிசுந்தர தேசிகன்

அன்னமதை மிகவழங்கும் சுப்பிர மண்ய
அறிவுள்ள தேசிகரே யொன்று கேண்மின்
நன்னெறியைக் காட்டுகின்ற தருமை வாழ்வே
நானுனக்கோ ருதவிதனைப் புரிந்தேன் இல்லேன்
மன்னவனே நின்பொருளை யென்றுங் கொள்வேன்
மகத்தான வென்குறையை யுன்கண் கூறி
அன்னபொரு ளிறைவனுக்கே யாகும் மென்பேன்
அப்பயன்றன் எனக்கில்லை உமக்கே யாமே

வேறு

பார்முத லைந்திற்கு மப்பால் விளங்கும் பரம்பொருளை
ஆர்வமுடனே வழிபா டியற்றும் அழிவிலனீ
தார்அணி மார்பன் தருமை நகர்க்குத் தலைவ னென்பன்
சோர்விலாச் சுப்பிர மண்யநீ வாழ்க சுகமுடனே.

நல்லோர்க்கு நல்லவை யென்றும் புரிகின்ற நற்குருவே
கல்லினை யொத்தார் பெருங்குற்றம் நீக்கும் கனிவுடையாய்
வல்லமை கொண்டாய் தருமைப் பதியினில் வாழ்கநன்று
இல்லையென் றது கொடுக்கின்ற சுப்பிர மணிவிளக்கே.

இரணியன் வதைப் படலம் — தத்துவ நோக்கு

திரு. டாக்டர். சோ. ந. கந்தசாமி M A.,M. Litt.Ph.D.

(மலர் 30, இதழ்8 , பக்கம் 406 இன் தொடர்ச்சி)

உயிர்இயல்பினை சாங்கிய யோகங்களைக் குறிக்கும் பகுதியில் உணர்த்தினுன் (66, 69) தீயஉயிர், தூயஉயிர் எனவிரண்டும் இரணியன், பிரகலாதன் என்ற பாத்திர வடிவில் உருவாக்கிக் காட்டுகிறுன்.

வீடுபேற்றுத்தடைகள் :

உய்திக்கு உய்க்கும் வழியில் முட்டுக் கட்டைகளாய் முளைப் பவை முனைப்பு நினைப்பும், திரிபுணர்ச்சியும், ஏதவாதமும் ஆகும். கம்பன்,

> " இரணியனே நம. " (10)

" அற்புத மாயையால் அறிகிலார் பலர் " (66) எனக் குறித் தல் காண்க. இறையும் உயிரும் ஒன்றே என்ற மாயா வாதிகளை 'யாமேபரம்' (109) என்ற பாடலில் கண்டிக்கிறுன். மெய்ஞ் ஞானத்தால் உணர வேண்டிய இறைவனை, ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் சோதிக்கத் துணியும் நையாயிகவாதிகளை, ' அளவையான் அளப்பரிது ' (62) என்ற பாடலில் எள்ளுகிறுன். பதியை உணரப் பசுஞானமே போதும் என்பாரை,

> " ஆயப் பெறும் நல்நெறி தம்அறிவென்று
> ஓயப் பெறும் ஈசர்கள் எண்ணிலரால் " (108)

என்று நையாண்டி செய்கிறுன். வெல்லாமல் எவரையும் வெருட்டி மருட்டும் வித்தகச் சமயவாதிகளை,

> " காலையில் நறுமலர் ஒன்றக் கட்டிய
> மாலையின் மலர்புரை சமய வாதியர்
> சூலையின் திருக்கு அலால் " (77)

எனச் சாடுகிறுன். சமயங்கள் சந்திக்கும் இடம் ஒன்றே என்பதை,

" வேலையும் திரையும்போல் வேறுபாடிலான் " (77)

" கொம்போடு அடை, பூ, கனி, காய் எனினும்
வம்போ மரம்ஒன்று எனும் வாசகமே " (111)

எனவரும் பகுதிகளில் எழில்நலம் மிளிர இயம்புகிறுன்.

வீடுபேறு எய்த வழி :

பக்தி, பிரபத்தி, ஞானம் என்ற சாதனங்கள் வீடுபேற்றினைச் சாதித்துக் கொடுப்பன என்பதைக் கம்பன் அறியாதவனு? இம் மூன்றும் காரண காரியமாய் விளைவன. பக்தி என்பது இறைவனிடம் செலுத்தும் அசைக்கமுடியாத அன்பு "என்பு பெருத இழிபிறவி எய்தினும்நின், அன்பு பெறும்பேறு அடியேற்கு அருள்" (169) என வருதல் காண்க. கூற்றினும் கொலை வல்லாரை ஏவியும் (80 - 84), இந்தனம் அடுக்கி எண்ணெய் ஊற்றி எரி மூட்டியும் (84 - 86), எட்டுப் பாம்பை விட்டும் (87 - 90), வெஞ்சின வேழம் விடுத்தும் (91 – 98), கல்லிற் பூட்டிக் கடலில் தள்ளியும் (99 - 114), நஞ்சு ஊட்டியும் (115 - 116), தானே தகைக்க முற்பட்டும் (117) இரணியனல் பிரகலாதனை இம்மிகூட அசைக்க முடியவில்லை. இதனுல் பக்தியின் பெருமை வெளிப்படக் காண்கிறேம். பிரகலாதன் கதையின் இப்பகுதி அப்பர் வரலாற்றினை ஒத்திருத்தலின் கம்பன் சேக்கிழாரை அறிந்தவன் ஆகலாம்.

பிரபத்தி என்பது இறைவன் திருவடியைச் சரண்புகுதல். மகாவிசுவாசம் பிரபத்தியின் சிறப்புக்கூறுகும். இதனைக் கம்பன் "

" என்மன் உயிர்தான்......
உந்தாரியதன்று; உலகு யாவுமுடன்
தந்தார் கொயாநின்றதுதான் " (118)

" என்உயிர் நின்னுல் கோறற்கு
எளியதொன் றன்று; யான்முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடம்தொறும் தோன்றுனுயின்
என்னுயிர் யானே மாய்ப்பல்;
பின்னும் வாழ்வுஉ கப்பல் என்னின்
அன்னவற்கு அடியேன் அல்லேன்
என்றனன் அறிவின் மிக்கான் ' (126)

" புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு
அடிமையின் புக்கார் " (32)

எனத் தெளிவுறுத்தல் காண்க.

மைந்தன் என்றும் பாராமல் இரணியன் புரிந்த கொடுமைகளை ஈசன்பால் கொண்ட பக்தி, பிரபத்தியால் பிரகலாதன் தாங்கிக்கொள்கிறான்.

திருமந்திரம் :

பக்தி, பிரபத்தியில் பயில்வார்க்கு இறைவனின் மறைமொழியான எட்டெழுத்து உறுதுணை என்பதைக் கம்பன் உணர்த்துகிறான். எட்டெழுத்தின் சிறப்பினை, நாராயணா என்னாத நாவென்ன நாவே' என இளங்கோ அடிகளும், 'நலம் தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்' என மங்கை மன்னனும் மனங்குளிரப் பாடுகின்றனர். நாரணன் விளையாட்டெல்லாம் நறுந்தமிழ்க் கவிதையாகப் பாடவந்த கம்பன் எட்டெழுத்துச் சிறப்பினை விட்டுச்செல்வானா? எட்டெழுத்துத் திருமந்திரத்தினை, 'ஓம்நமோ நாராயணாய' (23), நமோ நாராயணாய (42), மந்திரம் (44), திருப்பெயர் (88), பெரும்பதம் (28, 30), மெய்ப்பொருள் (45), வேதத்து உச்சியின் மெய்ப்பொருட்பெயர் (22), நடுஒக்கும் தனிநாயகன் நாமம் (101) எனப் பல்வகைத் தொடர்களால் குறிக்கிறான். இம்மந்திரம் பிறவிக்கு மரக்கலம், நாவிற்கு அருங்கலம், சொல்லில் மங்கலம் எனப்போற்றுகிறான்.

எட்டெழுத்தின் பொருள் :

ஓம் நமோ நாராயணாய என்ற திருமந்திரத்தில் 'ஓம்' என்பதை ஓரெழுத்து ஒரு மொழியாகக் கொள்வர். 'மூலமாகிய ஒற்றை எழுத்து மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி' என்பது பெரியாழ்வார் பாசுரம். கம்பன்,

" ஓம்எனும் ஓர்எழுத்து அதனின் உள்உயிர்
ஆம்அவன்; அறிவினுக்கு அறிவும் ஆயினான் " (76)

" முந்தைஓர் எழுத்தென வந்து மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையன் " (72)

எனவரும் பகுதியில், (ஓம்' என்ற மூலமந்திரத்தை (பிரணவப் பொருள்) விளக்குகிறான். அ, உ, ம் என்ற மூன்றின் சமுதாயம் 'ஓம்' ஆகும். அகரம் இறைவனையும் மகரம் உயிரினையும்

உகரம் தோற்றத்தையும் சுட்டி, ஆன்மா, ஆண்டவனுக்கே அடிமை என்ற பொருளை உணர்த்தும். நம: என்ற சொல்லில் ம - உயிர்க்கு, ந - இல்லை எனப்பொருள்தரும். எனவே நம: என்பது, நானும் எனக்கு உரியவன் அல்லன்; பிறபொருளும் எனக்கு உரியதல்ல; எல்லாம் இறைவனுக்கே உரியவை என்ற பொருள் பொதிந்ததாகும். நார, என்ற சொல்லிற்கு உயிர் களின் கூட்டம் என்பதும், அயன, என்ற சொல்லிற்கு உபாயம் பலன், ஆதாரம், நுழைவிடம் என்பதும் பொருள் என்ப. 'நாராயண' என்ற தொகைச்சொல் இருவகையில் பொருள் பயத்தல் தெளிவு. எம்பெருமான் ஆன்மாக்களின் கூட்டத்திற்கு உபாயமாகவும், அனுபவிக்கப்படும் பலனுகவும், ஆதாரமாகவும் ஆகிறுன் என்பது வேற்றுமைத் தொகைப் பொருள் (தத்புருஷ சமாஸம்) முடிந்த பொருள் அவனுள் உலகம் உள்ளது என்பது. நாரங்களை (ஆன்மாக்களின் தொகுதியை) இறைவன் நுழை விடமாகக் கொண்டுள்ளான் எனல் அன்மொழித்தொகைப் பொருள் (பஹுவ்ரீஹி சமாஸம்) போந்தபொருள் உலகத்துள் அவன் உள்ளான் (அந்தர்யாமியாய்) என்பது. 'ஆய' என்ற நான்கன் உருபு கைங்கர்யத்தைக் காட்டும். இம்மகாமந்திரத்தின் பொருளை,

"தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்றுதான் அவற்றுள் தங்குவான்" (59)

"உன்னிற் பிறிதாயினவோ உலகம்
பொன்னிற் பிறிதாகிய பொற்கலனே" (112)

'பொன்னுளே தோன்றியதோர்
பொற்கலனே போல்கின்றேன்' (160)

'வேலையும் திரையும்போல் வேறுபாடிலான்' (77)

எனக்கம்பன் கவிச்சுவை பெருகப் பாடுதல் காண்க. இங்ஙனம் எட்டெழுத்தின் பொருளை உணர்ந்து ஓதுவார் எல்லா உயிர் களையும் ஒப்பநோக்கும் ஒட்பமும், பார்க்கும் இடம் எங்கும் நீக்க மற நிறைந்திருக்கும் கடவுட் காட்சியும் எய்துவர். எனவேதான் விரும்பிய பொருளையும் விடுபேற்றையும் அளிக்கவல்ல எட்டெழுத்தின் பெருமையினைப் பல பாடல்களில் கம்பன் பகர் கிறுன் (28, 30, 32, 40, 42, 43, 44, 45, 46).

ஞானம்:

பக்தியும் பிரபத்தியும் முற்றியோர் மெய்ஞ்ஞானம் பெறுதல் உறுதி. மெய்யுணர்வே வீடுபேற்றிற்கு முடிந்த சாதனமாகும். மெய்யுணர்வைப் பெறுதற்குச் சாங்கியம்; யோகம் என்ற இரு

தரிசனங்களையே கம்பன் சிபாரிசு செய்கிறான் (60). கீதையில் கண்ணன் இவ்விரண்டினைத்தான் பார்த்தனுக்கு விரிவுரை செய்கிறான். ஐம்பூதங்கள் கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் ஐம்புலன்கள், மனம், அகங்காரம், மான் என்ற அந்தக்கரணங்கள், மூலப்பகுதி, என்ற இருபத்து நான்கு தத்துவங்களினின்றும் ஆன்மா வேறுபட்டது என்பதும், இவ்விருபத்தைந்து தத்துவங்களினுலும் இறைவன் எக்காலத்தும் ஆராயப் பெறுபவன் என்பதும் சாங்கியச் சார்புடைய வைணவக் கொள்கையாம் (60, 69). விதித்தன புரிதலும், விலக்கியன தவிர்தலும், உடற்பயிற்சிக்குரிய ஆசனங்களும், உள்ளப் பயிற்சிக்கு உரிய மூச்சுப் பழக்கமும் புலன் அடக்கமும் இறைவனை ஒருமை உணர்வால் எண்ணுதலும் என்ற நல்லொழுக்கத்தினை யோகநெறி சாதித்துக் கொடுக்கும்.

எனவே, சாங்கியயோக ஞானமே இறையருள் இன்பநிலை எய்த வழியாகும்.

வீடுபேற்று இயல்பு:

மற்றீண்டு வாரா நெறி என்றும், பிறவார் உறுவது பெரும் பேரின்பம் என்றும் முன்னைப் புலவர்கள் வீடுபேற்றியல்பினை வெளிப்படுத்தினர். வீடுபேறு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் கம்பனும் கற்பனை செய்கிறான். பிரகலாதன்,

> " வீடுபெற்றவர் பெற்றதின் விழுமிது என்றுரைக்கும்
> மாடு பெற்றனன் மற்றினி என்பெற வருந்தி " (31)

எனப்பேசுதல் காண்க. நரசிங்கப்பெருமான்,

> " உன் நாள் உலவாய்நீ என்போல்
> உளை என்றான் " (170)

> " உன்னைத் தொழுதேத்தி உய்க உயிர்எல்லாம் " (171)

> " வானவர்க்கும் நீயே இறை " (172)

> " நல்லறமும்...நின்சொல் தொழில் செய்ய
> மல்லல் உருஒளியாய்! நாளும் வளர்கநீ " (173)

எனப் பிரகலாதனுக்கு அருளிய சிரஞ்சீவிப்பதம்தான் வீடுபேறு எனக் கம்பன் கருதுகிறான்.

இதுகாறும் எழுதியவற்றால் இரணியன்வதைப் படலம் கம்பனின் தத்துவப்புலமையினைப் புலப்படுத்தும் சிந்தனைச் சுரங்கம் எனலாம்.

(குறிப்பு : பாடல் எண்கள் கம்பராமாயணம் - மர்ரே பதிப்பில் உள்ளன).

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப, நீலா

(மலர் 30, இதழ் 7, பக்கம் 373 இன் தொடர்ச்சி)

43. பலகை இட்டது

கருந்துழாய் முகிலொளியானை திருமாலை ஒருபால் கொண்டவரான சிவபெருமான் பாணபத்திரனுக்காகத் திருமுகப் பாசுரம் தந்தமை கண்டோமல்லவா. இதில் மழை தூங்கும் நள்ளிரவில் வருந்தி, யாழ் அவன் இசைப்ப, இருந்துபாடுக எனப் பெருமான் பலகையிட்ட பண்பினைக் காண்போம்.

இன்னிசைக் கிழவனும் பாணபத்திரன் சேரனிடம் நிதியம் பெறுவதன்முன் கூடற்பெருமான் கோவிலில் மூன்று வேளை மட்டுமே பாடும் வழக்கம் கொண்டிருந்தான். அதன்பின் அர்த்த சாமத்திலும் திருக்கோயிலுக்கு வந்து சோமசுந்தரப் பெருமான் செழுந்தரளச் சிவிகையில் திருப்பள்ளியறைக்கு எழுந்தருளும்போது திருநந்திதேவருக்குப் பின்புறம் நின்று பாடும் வழக்கம் கொண்டான்.

கருங்கடலை விசும்பெடுத்துக் கவிழ்த்ததோ :

ஒருநாள் எத்தகைய இடையூறடுத்தாலும் பாணபத்திரன் பாடும்நெறிநின்றும் தவறான் என்பதைக்காட்ட இறைவன் சோதனையொன்று நிகழ்த்தினன். அப்போது திசையெங்கணும் பரந்த மேகம் தடித்துத் திரண்டு இடித்து முழங்கியது. அவ்வொலிகேட்ட அரவுகள் சுருண்டு அளையுள் ஒதுங்கின. வருணன் முன்பு வரவிட்ட ஏழு மேகங்கள்போல இப்போது இந்த மேகங்கள் கூடலை வளைத்துக் கொண்டன.

கருங்கடலை விசும்பெடுத்துக் கவிழ்த்ததோ என்னுமாறும், வெள்ளிய மழைத்தாரைகள் சூழ்ந்திருந்த இருளால் இரும்புத் தூண்களெனக் கருதுமாறும் மேகம் முழங்கிப் பெய்தது. உள்ளம் உணரார் உள்ளம்போல் – அதாவது தம்மையும் தலை

வனேயும் உணரார் அறிவையொத்து உள்ளும் புறம்பும் மேலும் கீழும் தெரியாத இருளோடு மழையும் இணைந்துகொண்டது,

அந்த மாமாரியைப் பூமாரியாகக் கருதி நனைந்துகொண்டே வந்த பத்திரன் காமாரிதனைப் (காமனை எரித்தவர்) பணிந்து அவருடைய கருணைமாரியில் நனைந்து தேமாரி பொழிவதுபோல தெள்விளியாழ் வாசிக்கத் தொடங்கினன்.

உடல் நனைந்து நடுங்க, நரம்பை மீட்டும் கைவிரல்கள் விறைக்க, குளிரால் மயிர் சிலிர்க்க, நிரம்பிய சேற்றில் கால்புதைய நின்று, யாழினை இடத்தோளில் சார்த்தி – பத்திரன் எழுப்பிய இசையமுத வெள்ளம் செஞ்சடைக் கடவுளின் செவிவழிச்சென்று அருளென்ற பைங்கூழைத் தலையெடுக்கச் செய்தது.

தலைவியொருத்தி கனவுநிலையுரைத்தல் என்னும் துறையில் பாடுவதுபோலப் பாடினன் பாணன்.

மாதர் நகையாய் மதுரேசர்
உண்பலிக் கெம்மனைவாய் வந்து
காதன் முகத்தரும்பிக் காட்டியென்
சிந்தை கவர்ந்தார் போலும்
காதன் முகத்தரும்பக் கையறவு
தீரக் கலப்பேன் பாதி
பேதையுரு வாயிருந்தார் நாணிவிழித்து
ஆவி பிழைத்தேன் போலும்

ஒண்ணுதலாய் வெண்டலைகொண் டுண்பலிக்கு
நம்மனையி னூடே கூடற்
கண்ணுதலார் உள்ளாளக் கானமிசைத்து
என்னுள்ளங் கவர்ந்தார் போலும்
கண்ணுதலார் பாடும் அவிநயங்கண்டு
ஆகங் கலப்பேன் பாதி
பெண்ணுருவ மாயிருந்தார் வெள்கிவிழித்து
ஆவி பெற்றேன் போலும்

ஐயரியுண் கண்ணாய் திருவால
வாயுடையார் ஐயங் கொள்வான்
மையனகை செய்தென் வனமுலையின்
மேற்செங்கை வைத்தார் போலும்

மையனகை செய்தென் வனமுலை மேற்
கைவைப்ப மாழ்கிச் சோர்வேன்
தையலிடங் கண்டு நடுநடுங்கி
விழித்தாவி தரித்தேன் போலும்

அழகாகச் சிரிப்பவளே! ஒருசெய்தியைக் கேள். மதுரைப் பரன் எம்மில்லின் வாயில் வந்து பலியேற்க நின்றபோது தம் எழிலான முகத்தைக் காட்டி என் சிந்தையைக் கவர்ந்தார். அவரையே நினைந்து துயில்கொண்ட நான் கனவில் அப்பெருமானைத் தழுவ முற்பட்டபோது அவர் ஒருபாதி பெண்ணுருவாயிருந்தமை கண்டு நாணிக் கண்விழித்தேன் – என்று தன் சித்தங் கவர்ந்த செம்மலைப் பற்றிப் பேசுகிருள் ஒருத்தி. அகப்பொருட் சுவையோடு இப்படிப் பாடினன் பாணபத்திரன்.

பாட்டிற் கீந்த பரிசு :

பாடுகின்ற இருவர்க்காக அன்று தம் செவிகளையே பரிசிலாகத் தந்தவர் சிவபெருமான். (ஆகா, ஊகூ என்ற இருகந்தருவர்களின் பாடலை உவந்து அவர்களைத் தம் செவிகளிலேயே கொண்டார்). இப்போது பாணபத்திரனின் இசைத்தொண்டை உணர்ந்து விண்ணினின்றும் 'இப்பலகைமேல் நின்று பாடுவாயாக' – என்றருளிப் பொற்பலகையினையும் தந்தருளினர்.

இறையருளாணையை மறுத்தற்கஞ்சி அப்பலகைமேல் நின்று மதுரகீதம் பாடி மகேச்சுரனை மகிழ்வித்தான். பாதத்தின் வழி ஏறி உடலகம் முழுமையுமாகப்பற்றி – இசையை நலியச்செய்த குளிரும் நின்றது. பாணன் பணிமுடிந்து இல்லம் திரும்பி ஓய்வுகொள்ள பெருமழையும் நின்றது. அகத்தியரால் குடிக்கப் பெற்ற நீர் வற்றிய கடல்போல் விண்மீன்களும் கோள்களும் ஒளிர வானம் பிரகாசித்தது.

பகலவன் செங்கை ஆயிரங்கொண்டு அலைகடல் நீந்தி பாயிருள் கிழித்தெழும் நேரத்தில் பாண்டியன் வரகுணன் இந் நிகழ்ச்சியினை அறிந்தான். உடனே பாணபத்திரனை இறைவனளித்த தவிசில் ஏற்றி, பின்னும் அவனுக்கு மணியும் பொன்னும் அன்னபிற செல்வம் பலவுங் கொடுத்து ஆதரித்தான். பாணபத்திரனும் மட்டிலடங்கா மகிழ்வுடன் திருக்கோயிலில் நாற்போதும் பாடும் நியமம் பூண்டான்.

சிலபகல் சென்றபின் வேப்பந்தார் வரகுணன் சிவசாருப நிலையடைந்து சிவலோகஞ் சேர்ந்தான்.

(வளரும்).

இன்றி — வினையெச்ச மாற்றம்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

தொல்காப்பியர், உயிர்மயங்கியலில் ஒவ்வோர் ஈறுகளெடுத்துக் கொண்டு அவை புணர்ச்சிக்கண் எய்துகின்ற மாற்றங்களைக் கூறிக்கொண்டே வருகின்றார். இகர ஈற்றிற்கு வரும்போது வேற்றுமை வழியில் இகர இறுதிப் பெயர்கள் எய்தும் மாற்றத்தைப் பின்வரும் நூற்பாவினால் விளக்குகின்றார்.

" இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே " (235)

இகர ஈற்றுப் பெயர்ச்சொல் முன்னர் கசதப முதன்மொழி வந்துழி வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்திய வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது இங்கு விளக்கப்பட்டது. இப்பொதுவிலக்கணத்தின்பின், இவ்வீற்று இடைச்சொற்கள், வினையெச்சம், சுட்டுப்பெயர், அளவுப்பெயர், மரப்பெயர், நாட்பெயர், திங்கட்பெயர் முதலியன எவ்வெம்மாற்றங்கள் எய்தும் என்று கூறியுள்ளார். இவ்வீற்று வினையெச்சத்திற்கு முடிவு கூறுங்கால் ஆசிரியர் பின்வருமாறு கூறியுள்ளார்.

" இனி அணி என்னும் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியும் சுட்டும் அன்ன " (236)

" இன்றி என்னும் வினையெஞ் சிறுதி
நின்ற இகரம் உகர மாதல்
தொன்றியன் மருங்கிற் செய்யுளுள் உரித்தே " (237)

' இன்றி ' என்ற வினையெச்சம், ' இன்று ' என்று மாறுகின்ற நிலை ' பழக நடந்த கூற்றையுடைய செய்யுளுள் உரித்து' (நச்சினார்க்கினியர் உரை) என்ற கருத்துச் சிந்தனைக்குரியதாக உள்ளது. நச்சினார்க்கினியர் இதற்குப் பின்வரும் மேற்கோளை எடுத்துக் காட்டியுள்ளார்.

" உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே "

இம்மேற்கோளில், 'இன்றுப்புற்கை' என மிகாது. 'இன்று புற்கை' என்று இயல்பாக வருவதற்கு ஆசிரியர் தொல்காப்பியர் தம் நூற்பாவில் விதியோ விளக்கமோ கூறுமற் சென்றமையின் நச்சினர்க்கினியர், தம்முரையில் அதனை விளக்குவாராய், "நின்ற" என்றதனால் வினையெச்சத்திற்கு முன் எய்திய வல்லெழுத்து வீழ்க்க" என்று எழுதுகின்றார்.

" உகர இறுதி அகர வியற்றே " (254)

" அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே " (203)

உகர ஈற்று வினையெஞ்சு கிளவியின் முன் இவ்விருநூற்பாக்களான் விதிக்கப்பெற்ற வல்லெழுத்துத்தான், " எய்திய வல்லெழுத்து " என்று நச்சினர்க்கினியரால் குறிக்கப்பெற்றுள்ளது.

இன்று என்ற சொல் 'இன்றி' என்ற சொல்லாக மாறுகின்றது என்று தொல்காப்பியர் கொண்டுள்ளார் என்பது மேற்காட்டப்பெற்ற நூற்பாவினுல் விளங்குகின்றது.

இல் + து = இன்று

இல் + ஆ + து = இல்லாது

அல் + து = அன்று

அல் + ஆ + து = அல்லாது

என்னும் சொல்லமைப்புக்களை நோக்கினுல். 'இன்று' என்பதே வினையெச்ச வடிவமாகவும் வழங்கி வந்திருக்கக் கூடும் என்று கொள்ளவும் இடம் இருக்கின்றது. ஏனெனில் 'இல்லாது' என்னும் ஒரு சொல் வடிவம் நம் தமிழில் உள்ளது. அன்றியும், இதற்கு இணையாக, அல்லாது என்ற சொற்களில் உள்ள 'ஆ' என்பதனை எதிர்மறை உணர்த்துவதாகக் கொள்ள வேண்டும்.

'இன்றி' என்பதே 'இன்று' என்ருயிற்று என்று கூறிய தொல்காப்பியர், 'அன்று' என்ற வினையெச்சத்தைப்பற்றி வாளா போயினமை வியத்தற்குரியதாக உள்ளது.

'நாளன்று போகி'

'இடனன்று துறத்தல் வல்லியோரே'

'வாளன்று பிடியா வன்கண் ஆடவர்'

என்றெல்லாம் பழைய செய்யுளில்வருதல் கருதத்தக்கது. 'அன்றி' என்பதே 'அன்று' என்று ஆகியிருக்கவேண்டும் என்று தொல்காப்பியர் நெறியில் நின்று சிந்திக்கும் நச்சினார்க்கினியர் கருதுகின்றார். இதனைத் தம் உரையில் தம்முடைய வழக்கமான விதப்புக்கிளவி விளக்கமாக இக்கருத்தைப் பின்வருமாறு அமைக்கின்றார் இவ்வுரையாசிரியர். "தொன்றியல் மருங்கின் என்றதனான் அன்றி யென்பதூஉஞ் செய்யுளில் இம்முடிபு எய்துதல் கொள்க. அன்றி, இன்றி என்ற சொற்களில் வரும் ஈற்று இகரங்கள் முற்றியல் இகரங்கள் என்பதும், அவை தொல்காப்பியர் கூறுமாறு 'அன்று' 'இன்று' என்று மாறிய பின் குற்றியலுகரங்கள் என்பதும் நச்சினார்க்கினியர் கருத்துக்கள். 'முற்றியலிகரம் திரிந்து குற்றியலுகரமாய் நின்றது' என்ற சொற்றொடர் இதற்கு அடிப்படையாக உள்ளது.

"இன்று என்னும் எச்சம் இன்றி என்பதன் திரிபாயின் இல்லாது என்னும் எச்சமும் ஓர் இகர ஈற்றுச் சொல்லின் திரிபாயிருக்க வேண்டும்" என்று இவ்வாறு மாறுபாடும் பெரும் புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் கருதுவது இங்கே நினைக்கத்தக்கது.

"விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின் றுடற்றும் பசி"

என்னும் திருக்குறளில், 'இன்று' என்ற சொல் வினையெச்சமாகவே வருதல் காணத்தக்கது.

இங்கு எடுத்துக்காட்டப்பெற்ற தொல்காப்பிய இகர ஈற்று நூற்பாவினுல், 'இன்று' என்பதே வினையெச்சமாயிருக்க, 'இன்றி' என்ற சொல்லே இறுதி நின்ற இகரம் உகரமாகத் திரிந்தது என்று தொல்காப்பியர் கூறுதற்கு வேறு ஏதேனும் காரணம் உண்டா என்று ஆராய்தல் வேண்டும் என்பது புலனும். இவ்வாறே இயல்பாக அமைந்த 'நீயிர்' என்பதனை 'நும்மின் திரிபெயரா'க்கொண்டு தொல்காப்பியர் விளக்குவதும் இங்கு ஒப்பிடத்தக்கது.

கற்பனைக்குக் கம்பன்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

கற்பனை யாளன்
விற்பனன் கம்பன்
அற்புதங் கூறும்
சொற்பதம் விறும். 1

காரு யர்ந்த கரத்தினன்
பாரு யர்ந்த பரத்தினன்
சீரு யர்ந்த கவியிலே
சீரு யர்ந்தான் புவியிலே 2

கற்பனை என்பது கடலெனில், ஆழம்
கற்பதுன் பாட்டினில் கம்பனே ! வான
விற்படிந் தோங்கிடு விலங்கலா மென்னில்
சொற்படிந் துயர்கவித் தோற்றமும் கற்கும். 3

ஆறு பாய்ந்திடும் ஆறெலாம் பாய்ந்திடச்
சேறு துள்ளிடு சேலொடு துள்ளிட
ஊறு தேறலொடு மூக்கில்வ மூக்கிட
கூறு மாக்கவி கூட்டுமே நம்மையும் 4

நரைத்தகோ மான்முடி நண்ணிக் காதினை
உரைத்த மறையெலாம் உரைக்கும் திக்கெலாம்,
திரைத்திடு போதினும் திரைக்கு மோகவி ?
நரைத்தநற் கற்பனை நிகழ்த்து மேபுவி ! 5

ஓடுங் காய்கதிர் உதிப்ப தாயினும்
விடு மாமலை விழ்வ தாயினும்
நாடு மோகையும் நலிவு மேற்றியே
பாடு மோர்திறம் பாடு பெற்றிடும். 6

தோளினெடு மார்புறவே தோன்றலை யணைக்க
ஆளினெடு நாலுவகை அணிபடையின் வேந்தன்
நீளிருமா புவிசுமக்கும் நிலையள ந்தான் என்றுன்
நாளினெடு வாழுகவி நலமளப்ப தேதால். 7

குன்றுதிகழ் சோதிமுகக் குறவருக்கும் விண்ணகத்தே
நின்றுதிகழ் இமையவர்க்கும் நிலவுமுகம் பார்ப்பதற்கு
நன்றுதிகழ் ஆடியென நவின்றஉரை கவியரசின்
நின்றுதிகழ் கற்பனைக்கு நிலைத்தபெரும் ஆடியன்றோ. 8

மின்னேவரும் இடியேதரும் விண்ணின்வரு காரும்;
முன்னேவரும் ஒருகற்பகம்; மூவாநல அமுதும்
பின்னேவரும் நிலையேபெறும் பின்னப்படாத் தேவர்
மன்னேவரும் கம்பன்தமிழ் மன்னுங்கவி உலகில் 9

மெய்யோ ஈதும் விண்டிட ஆகா மெய்யன்றோ!
மையோ என்னும் மரகத மேனி வடிப்பானும்
பொய்யோ என்னும் சிற்றிடை என்றே புகழ்வானும்
ஐயோ ஐயோ ஆருளர் இந்தக் கவிபோலே! 10

பூத வத்தணி யாக நன்பொருள் பூண்டிட்டே
சீத ளத்தொடு சீரொழுக்கமும் சேர்ந்திட்டே
நாத வக்கவி போலு நன்னதி; கவியென்றால்
பூத லத்தவன் போன்ற கம்பனின் கவியன்றோ. 11

சொற்பெரு மிராமன் காதை சொல்லிடக் கம்பன் தானும்
நற்பெருங் கவிதை தன்னை நானுமே கண்டேன் அல்லேன்
அற்புதம் என்ப தொன்றும் அரும்புலம் என்ப தொன்றும்
கற்பனைப் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன் 12

நாவா யிரந்தான் பெற்றாலும் நாவொன் றமைந்த கம்பன்போல்
ஆவார் எவரே அகிலத்தில்? அவனே ஒருவன் கவியென்பான்
பாவாம் மாலை எந்நாளும் பாவம் என்கை அகப்பட்டால்
பூவின் மாலை போலாமே புவியில் நானும் கவியன்றோ 13

ஆடிற் றேங்கும திற்புறத் தழகிய கொடியெனில் அக்கணம்
பாடிற் றும்சுவைக் கம்பனின் நாவுமே, படிந்திடக் கற்பனை!

கூடிற் ருமெனக் கோலமார் சீதையாய்க் கொண்டுரு அமுதமும்
நாடிற் ருமென அழைத்திடச் செய்குவன் இராகவ நம்பியை. 14

மீனுலவிப் பாய்புனலின் மேலுலவிக் குளிர்ந்திருக்கும் மேலே
நீண்ட
வானுலவி விரிந்திருக்கும்; மண்ணுலவித் திணிந்திருக்கும்;
திரியுங் காற்றில்
தானுலவி உயிர்த்திருக்கும் தனிஉலவிக் காய்நெருப்பில்
கனிந்திருக்கும்
தேனுலவி வருங்கவியில் நானுலவிச் சிறந்திருப்பேன்
தேவரென்றே. 15

வானை நண்ணிடும்; வளியை அடைத்திடும்; திக்குகள் நின்றுள்ள
ஆனை எய்திடும் அணுவைப் பிளந்திடும் மின்னிட
மிளிர்பொன்னின்
மானை வீழ்த்திடும் மரக்கடல் உறிஞ்சிடும் செந்தமிழ் உயர்கம்பன்
தேனைச் சிந்திடு கற்பனை போலுமே தேரிரா மன்பாணம். 16

நின்ற குன்றினை நெருங்கு குன்றெனக் கும்பகர்ணனும்
முன்னோனைச்
சென்றணைந்தனன் என்றுசெப்பினன் கம்பநாடனும்கவியெல்லாம்
வென்ற கற்பனை பெய்த மேகமும் செய்த தொண்டினால்
உணர்வெல்லாம்
ஒன்ற வண்மையும் உள்செழித்திட உயிர்வளர்த்திடும்
நாளெல்லாம். 17

வானளக்கும் மாண்புகொண்ட குறளும் போலும் செறிவிலே
தேனளக்கும் தெய்வமிக்க தமிழும் போலும் இனிமையில்
மானளக்கும் மங்கை வண்ணக் கண்கள்போலும் பரப்பிலே
நானளக்கக் கோலும் ஏது? கம்ப நாடன் கற்பனை. 18

அன்று சீர்க்கொடை ஆற்றுதவத்தினால் அருளாடு வந்தனன்பாரி
இன்று சாந்தமே இயற்று தவத்தினால் அமைவுடன் வந்தனன்
காந்தி
நின்று தர்மமும் நேர்ந்த தவத்தினால் நேர்ந்தனன்
வள்ளுவத்தேவன்
துன்று கற்பனை தொடர்ந்த தவத்தினால் தோன்றினன் கம்பனும்
தோன்றல். 19

உலகியல் உணர்ந்தவர் சேக்கிழார்

புலவர். திரு. சி. புண்ணியகோடி

செந்தமிழ்ச் செல்வர் சேக்கிழார் பெருமான் அவர்கள் இயற்றிய திருத்தொண்டர் புராணம் பிற காவியங்களினும் பல் வகையில் தனிச் சிறப்புப்பெற்று இலங்குகிறது. அது உலகியல் நிகழ்ச்சிகளையும் வரலாற்றுத் துணுக்குகளையும், பண்பொளி வீசும் நிகழ்ச்சிகளையும், பத்தித்திறம் விளக்கும் பாங்கான செயல் களையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. ஏனைய கவிஞர் கள் அணியும் நயமும் அமைய நுண்மாண்நுழை புலம் புலப் படுத்தித் தம் காவியங்களைச் செவ்வையாய்ச் சொல்லி முடித்தனர். சிந்தையள்ளும் செய்யுள் யாத்த சேக்கிழார் சுவாமிகளோ மேற்கண்ட அழகுகளோடு, உத்திகளோடு பன்னூறு ஆண்டுக் கால மக்களுடைய வாழ்க்கை நிலையை வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் உரைத்துப் போந்தார்.

செங்குன்றைமுனி சேக்கிழார் பெருமான் சோழனுடைய அமைச்சராகப் பணியாற்றிச் சிறப்பித்து வருகையில், தாம் பெற்ற உலகியல் அனுபவங்கள் அனைத்தையும் தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்துள் கூறிச் சென்றூர் என்னலாம். அவர் தம் பாக்களில் உலகியல் எங்ஙனம் ஒளிவிடுகிறது என்பதனைச் சான்றுகள் வாயிலாகக் காண்பாம்.

சங்க காலத்தில் திருமணங்களைத் தலைவன் தலைவியர் தாமே நிச்சயித்தனர். தலைவன் தலைவியருக்குத் தொடர்பு பெரும் பான்மை தெய்வத்தான் எய்தியது.

> " அதுவே
> தானே அவளே தமியர் காணக்
> காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்" —களவியல் -

இங்ஙனம் களவொழுக்கம் பூண்ட தலைவன் தலைவியர், கற்பொழுக் கம் கண்டனர் இறுதியில். களவொழுக்கத்தில் குறைகள் தோன் றியபோது திருமண முறைகள் அரும்பத் தொடங்கின. இதனை

“ பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப ” —தொல் - பொருள்

என்னும் தொல்காப்பிய நூற்பா மெய்ப்பிக்கும். பிற்காலத்தில் பெரியோர்களால் நிச்சயிக்கப்படுதலையே பெருமையாகக்கருதினர் போலும். அந்நிலை செஞ்சொல் வேந்தர் சேக்கிழார் சுவாமிகள் காலத்தில் சாலவும் செவ்விய நிலையில் இருந்தமையை அவர் தம் பாவால் நாம் நன்கு அறியலாம்.

நாற்றிசையும் இசை போக்கிய நாவுக்கரசர்தம் திருதமக்கை யாராகிய திலகவதியாரைப் பல்லவப்படைத் தளபதி கலிப்பகை யார் மணக்க விழைந்து ,மகட்பேச பெரியோர்களை விடுக்கிறார்.

“ பூண்ட கொடைப் புகழனார் பாற்பொருவின் மகட் கொள்ள
வேண்டி எழுங்காதலினால் மேலோரைச் செல விட்டார் “
—அப்பர் - 23

ஆதலின்

“ அணங்கனைய திலகவதியார் தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம் பேசிக் குலம் பேசிக் கோதில்சீர்ப் புகழனார்
..............பைந்தொடியை மணம் நேர்ந்தார் ”—அப்பர் - 24

என்று குன்றைநகர் நாவலர் சேக்கிழார் சுவாமிகள் கூறியுள்ளார். ஈண்டு, இல்லது, இனியது, நல்லது என்னும் இலக்கண நூல் கொள்கை வழிநின்று கற்பார் களிகொள்ளும் வண்ணம் நயஞ் செறிந்த கற்பனையை விரிப்பதுடன், உள்ளது உள்ளபடி உலகி யல் வழாது உரைத்தமை அறிஞர் அறிந்து இன்புறுவர்.

ஆளுடைபிள்ளையாகிய சம்பந்தர் புராணத்துள்ளும் பெரியோர்கள் நிச்சயிக்கும் திருமணக் காட்சியின் மாட்சியினைக் காண்கிறோம்.

“ ஞானபோ னகருக்கு நற்றவத்தின் ஒழுக்கத்தால்
ஊனமில்சீ லத்(து) உம்பால் மகட்பேச வந்ததென
ஆனபே ரந்தணர்பால் அருளுடைமை யாமென்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார் ”
—சம்பந்தர் - 1166

பண்பிற் சிறந்த சேக்கிழார் அழகாக உலகியலைப் போற்றிச் சிறப்பிக்கும் தகைமைதான் என்னே !

" திருமணஞ்செய் கலியாணத் திருநாளும் திகழ்சிறப்பின்
மருவிய ஓரையும் கணித மங்கல நூலவர் வகுப்பப்
பெருமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன் போக்கி
அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப்பா லிகை விதைத்தார்"
—சம்பந்தர் - 1169

திருமணத்திற்கு மங்கல நாள் குறிப்பதும், உற்றார் உறவினர் சுற்றத்தினர்க்கு மணவோலை போக்குவதும், நன்னாளில் அணி முளைப்பாலிகை விதைப்பதும் செந்தமிழ்க் கடல் சேக்கிழார் சுவாமிகள் கவியில் இடம் பெற்றுத் திகழ்கின்றன.

அறம் வளர்த்தற்கும் விருந்தெதிர் கோடற்கும் இல்வாழ்க்கை ஏற்றல் ஆடவர் கடனாகும். இதனைச் சிலப்பதிகாரத்தான் நாம் நன்கு உணரலாம்.

" அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை "

என்னும் கண்ணகி மொழியால், கணவனைப் பிரிந்ததற்குப் பெரிதும் வருந்துதலைவிட, அறஞ்செய்ய இயலாமைக்கு மிகவும் துன்புற்றதை நாம் நன்கு அறியலாம்.

இல்வாழ்க்கை அறஞ்செய்தற்கு நிலைக்களன். இவ்வுலகியல் கருத்தினைச் சேவையர் குலாதிபர் சேக்கிழார்பெருமான் திருஞான சம்பந்தர் புராணத்துள்,

" வேள்வி பல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருளல் வேண்டும் " —சம்பந்தர் - 1156

என்று கூறியுள்ளார்.

பல்லவனின் படைத்தளபதியாய் வாதாபிவரை சென்று வெற்றிவாகை சூடி புகழ்க்கொடி ஏற்றிய பரஞ்சோதியார், அருள் கைக்கூடப் பெற்றபின், சித்தத்தைச் சிவத்தில் நிறுத்தி பத்தித் திறம் பூண்டு சிவத்தொண்டராய் இலங்குகாலை சீராளர் தோன்றுகிறார். சீராளரின் நெய்யாடல் விழாச் சிறப்பைச் சொல்லில் விரித்துள்ளார் வண்டமிழ் அரசராம் சேக்கிழார் சுவாமிகள்.

" அருமையினிற் றனிப்புதல்வர் பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்பப் பெறற்கரிய மணிபெற்று
வருமகிழ்ச்சி தாதையார் மனத்தடங்கா வகைவளரத்
திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடிஎடுப்ப "

—சிறு - 18

எனச் செஞ்சொல் விரிக்கும் சேக்கிழார் சுவாமிகள் உரிய பருவத்தில் மயிர்வினை மங்கலஞ் செய்தலையும், புலன்கொளுவும் நற்சடங்கு இயற்றுதலையும் சிறப்பித்துரைக்கிறார்.

" வந்துவளர் மூவாண்டில் மயிர்வினைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரைப் பள்ளியினில் இருத்தினர். " –சிறு-22

என்று சிறுத்தொண்டர் புராணத்துள்ளும்,

" மருணீக்கி யார்சென்னி மயிர்நீக்கும் மறைவினையும்
தெருணீர்ப்பன் மாந்தரெலாம் மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருணீத்தங் கொளவிசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருணீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார் "

—அப்பர் - 20

என்று திருநாவுக்கரசர் புராணத்துள்ளும், அற்றைநாள் சமுதாயஅமைப்பில் நிகழ்வுற்ற அத்துணைச்சடங்குகளையும் ஒன்று விடாமல் கூறியுள்ளனவற்றைக் காணின் மகிழாதார் யாரோ?

வேள்வியில் எழுந்தீ நாக்கு வலமாகச் சுழன்று எழுதல் சிறப்புடையது என்று சான்றோர் கூறுவர். அதனைக் கருத்தில் கொண்டு கன்னல் மொழியில் காவியம் புனைந்த சேக்கிழார் பெருமான்,

" வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி "

—சம்பந்தர் - 1193

" ஆங்கு வேதியில் அருத செந்தீ வலஞ்சுழிவுற்று
ஓங்கு முன்னையில் ஒருபடித்தன்றியே ஒளிர " —31

என்று கூறியுள்ளார். (தொடரும்)

யமன்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 30. இதழ் 4. பக்கம் 204இன் தொடர்ச்சி)

யம, தர்மராஜ, மிருத்யு. அந்தக, வைவஸ்வத, காலசர்வபூத க்ஷய, ஔதும்பர, தத்ன, நீல, பரமேஷ்டி, வ்ருகோதர. சித்ர, சித்ரகுப்த என்று பதினன்கு பெயர்களைச் சொல்லித் தர்ப்பணம் செய்ய வேண்டும். யமன் தேவனுகவும், பித்ரு கூட்டத்தில் சேர்ந்தவனுகவும் இருப்பதால், உபவீதமாகவோ ப்ராசீனவீத மாகவோ (பூணூலை வலமாகவோ இடமாகவோ அணிந்து கொண்டு) தர்ப்பணம் செய்யலாம். தன்னுடைய தந்தை உயிர் வாழ்ந்துகொண்டு இருப்பினும் இந்தத் தர்ப்பணம் செய்தல் வேண்டும்.

जीवत्पितापि कुर्वीत तर्पणं यमभीष्मयोः।

உயிர் வாழும் தந்தை யுடையவனும் யமனுக்கும் பீஷ்மருக்கும் தர்ப்பணம் செய்யவேண்டும் என்பது ஸ்மிருதி வாக்யம். வைதிகர் யமனை,

"ஸுகந்ந: பந்தா அபயம் க்ருணோது"

என்ற மந்திரத்தால் ஆவாஹனம் செய்வர்.

தஞ்சை ஜில்லா திருவிசநல்லூரில் வாழ்ந்த குட்டிக்கவி என்ற பெரிய புலவரை, அரண்மனையில் அரசனுக்கு அருகில் இருந்த சிலர், தஞ்சை மன்னனின் சபையில் தன் புலமையைக் காட்டிப் பரிசுபெற முடியாமல் தடுத்து வந்தனர், அதனல் வெறுப்படைந்த குட்டிக்கவி வீட்டிலேயே தங்கி எருமை மாட்டை வளர்த்து அதன் மூலமாக ஜீவனம் செய்து வந்தார். ஒழிந்த நேரத்தில் எருமை மாட்டையே தலைவனுக வைத்து "மஹிஷ சதகம் என்ற ஒரு நூலை இயற்றினர். அதில் யமவாஹனமாகிய

எருமையைப் புகழ்வதும், அரசனையும் தன் பகைவரையும் நிந்திப்பதும் மிகவும் ரசமுள்ளதாக இருக்கின்றன.

யமனறியாமல் உயிர்போகாது என்று உலக வழக்கத்திலுள்ள மொழியை மனதில் கொண்டு நீலகண்ட தீக்ஷிதர் என்ற கவி தேவாசுரயுத்தத்தை வர்ணிக்குமிடத்தில் அசுரன் யமனுடைய தண்டத்தைப் பிடுங்கிக்கொண்டு யமனை அடித்தான். ஆனால் யமனுடைய உயிர் அவனுடைய கழுத்திலேயே சுழன்றது. இந்த யமனின் உயிரைக் கொண்டுபோக வேறு யமன் இல்லையே என்று வர்ணிக்கின்றார்.

कालदण्डहतस्यास्य कण्ठे प्राणा जुघूर्णिरे ।
अन्तकं यद्धतं ने तु मन्तकोऽन्यो न विद्यते ॥

தர்மராஜாஷ்டோத்திர சதநாமாவளி

ओं धर्मराजाय नमः
सूर्यपुत्राय
संज्ञागर्भसमुद्भवाय
धर्मिष्ठाय
शान्तरूपाय
दुर्जनावलिशिक्षकाय
पुण्ययुक्ताभिगन्त्रे
तत्त्वदृष्टे
कृशोदराय
धर्मस्वरूपिणे 10
यमराजे
सर्वभूतभयङ्कराय
दीर्घरूपाय
महाकायाय
साधुसन्तोषदायकाय
श्रीविष्णुभक्ताय
कीनाशाय
यमाय
ओं संयमिनीश्वराय नमः
विशालनयनाय 20
पाशकोदण्डिने
दण्ड्यदण्डकाय
वचनामृतदायिने
भ्रुकुटीभीषणाय
प्राणिसंहारकृते
चण्डाय
दिव्यज्ञानप्रकाशकाय
कृपानिधये
साधुरक्षाय
कालदण्डवरायुधाय 30
सर्ववेदान्तवेदिने
महारौरवनायकाय
समस्ताभरणोपेताय
नीलाय
भक्ताभयङ्कराय
वीरवर्मसुतानाथाय

ओं ब्रह्मशर्मवरप्रदाय नमः
शूलारोपितमाण्डव्याय
महामहिषवाहनाय
माण्डव्यशापधारिणे 40
धर्मशास्त्रविशारदाय
बलिने
चक्रिणे
चित्रगुप्ताय
मार्कण्डेयफलप्रदाय
दुन्दुभिस्वननिर्घोषाय
श्राद्धदेवाय
परेतराजे
औदुम्बराय
अन्तकाय 50
शास्त्रो
परमेष्ठिने
वृकोदराय
करालकाय
शमनाय
सर्वलोकनमस्कृताय
सर्वज्ञाय
दक्षिणाधीशाय
क्षीणाङ्घ्रये
वैद्युतप्रियाय 60
कालालकाय
मनुभ्रात्रे
सावित्रीवरदाय
प्रभवे
भरणीतारकाधीशाय
दध्नाय

ओं तत्त्वोपदेशकृते नमः
उग्रदण्डप्रदाय
अव्यक्ताय
नाचिकेतवरप्रदाय 70
भक्तरक्षाकराय
कालाय
काकरूपधराय
अव्ययाय
एकादशीतिथ्यधीशाय
महानरकनायकाय
समवर्तिने
देवतेज्याय
मृत्यवे
नीलामनोहराय 80
वैवस्वताय
पितृपतये
पुण्यपाप विचारकाय
चण्डप्रचण्डसेनावते
कर्कशाय
महिषध्वजाय
मेरुशैलसमानौजसे
हरये
सर्वगुहाशयाय
चतुराशादिक्प्रचाराय 90
गूढपापात्ममर्दनाय
तटस्थाय
शत्रुसंहर्त्रे
पुण्यात्मने
पद्मजप्रियाय
मृत्युनाथाय

ओं शनिभ्रात्रे	नमः	ओं यमुनासोदराय	नमः
इन्द्रेष्टाय		मन्दाय	
चण्डशासनाय		श्वानद्वयसुसंयुताय	
करालाय	100	युधिष्ठिरपित्रे	
किङ्कराढ्याय		धीराय	
काकजातिवरप्रदाय		सर्वेष्टार्थफलप्रदाय नमः	

கடோபநிஷத்தில் ஆத்மவித்தையைப்பற்றி வினவிய நசிகேதஸ்ஸுக்கு ஆயுள், பொருள் முதலியவற்றைக் கொடுப்பதாகவும், ஆத்மாவைப்பற்றி விசாரணை வேண்டாம் என்றும் சொல்லி யமன் நசிகேதஸ்சை ஏமாற்ற முயன்றான். அப்பொழுது,

"लप्स्यामहे वित्तमद्राक्ष्म चेत्त्वा"

உன்னைக் கண்ட மாத்திரத்திலேயே செல்வம் முதலியவற்றையும் பெறுவேன். ஆதலின் ஆத்ம வித்தையே உபதேசிக்க வேண்டுமென்றான். ஆதலின் தர்சனத்தினாலேயே சகல பலனையும் அளிக்கக்கூடிய யமனைத் துதித்து சகல பலன்களையும் பெறுவோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

I visited this temple with my family, this day. There is calmness in the temple. One feels that he gets a vision of the Lord, and His consort really. The temple is neatly kept - That is due to efficent administration. The staff is very courteous. This is *the temple* in India.

(Sd.) B. S. Sivagurunatha Pillai,
District & Sessions Judge,
Tribunal for Disciplinary proceedings,
Tanjore.

25—7—1971.

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 30, இதழ் 8, பக்கம் 433 இன் தொடர்ச்சி)

திருவாதிரை :-

பர்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் திருவாதிரை நக்ஷத்திரம் ப்ரதானம், ஒரு மாசத்தில் இரண்டு நக்ஷத்திரம் இருந்தால் முந்தினதில் பர்வசம்பந்தமிருந்தாலும் பிந்தியதில் பர்வசம்பந்தமில்லாவிட்டாலும் கடைசியில்தான் விருதமனுஷ்டிக்கவேண்டும். கடையில் தான் ஆருத்ரா தரிசனம். —காரணாகமம்.

இரண்டு நாள் நக்ஷத்திரமிருந்தால் நிசியில் நக்ஷத்திரம் இருக்கும் தினம் உத்தமம்.

உதயம்முதல்எட்டுநாழிகைஎன்றுதிருவாதிரை இருக்கிறதோ அன்று திருவாதிரை தரிசனம். வ்ருதம், தீர்த்தம் இரண்டும் மாத்தியானன காலத்தில் செய்யவேண்டும். சாயங்காலத்தில் டோளாரோஹணம் செய்யவேண்டும். அன்று இரவு கிருஷ்ண கந்தம் சாத்தவேண்டும். நிசியில் அபிஷேகம் செய்யவேண்டும், உதயத்தில் தரிசனம் செய்யவேண்டும். —காரணாகமம்.

स्नानं च कृष्ण गन्धं च दर्शनं पूर्वरात्रके ।
व्रतं तीर्थं च डोला च पूजयेत्तु परेहनि ॥ — कारणम्

ஸ்னானம் க்ருஷ்ணகந்தம் தரிசனம் இது முன்னிரவில். விரதம், தீர்த்தம் டோளரி உற்சவம் இவை மறுதினம். —காரணாகமம்.

நடராஜா அபிஷேகம் :-

शिवाच्युतभगोऋक्षे चापमेष युगेरवै ।
कन्याकुंभ चतुर्दश्यां सिते स्नानं सभापतेः ॥

माखे भाद्रपदे चैव रवौ मध्याह्नतः परम् ।
चापयुग्म निशीथिन्यां रात्रिकालात्पर शुभम् ॥

திருவாதிரை, திருவோணம்; உத்திரம் என்ற இத்த மூன்று நக்ஷத்திரங்களில் முறையே மார்கழி மாதம், சித்திரை மாதம் ஆனி மாதங்களில் நடராஜப்பெருமானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். புரட்டாசி, மாசி, ஆவணி இந்த மாதங்களில் சுக்லபக்ஷ சதுர்த்தசியில் நடராஜப்பெருமானுக்கு அபிஷேகம் செய்யவேண்டும். மாசிமாதம், புரட்டாசிமாதம், ஆவணிமாதம் இம்மூன்று மாதங்களிலும் மாலையில் நடராசாபிஷேகம் செய்ய வேண்டும். மார்கழி மாதம், ஆனி மாதம், மாசி மாதம் இவை களில் விடியற்காலம் செய்யவேண்டும். (ரவி என்பது ஆவணி மாதத்தையும், நிசிதினீ என்பது மாசி மாதத்தையும் குறிக்கும்.

மார்கழி மாதத்திய சஷ்டியுடன் கூடி சதய நக்ஷத்திரத்தில் விநாயக பூஜை செய்யவேண்டும். சஷ்டி திதியிருந்தாலும் இல்லாவிட்டாலும் சதய நக்ஷத்திரம் முக்கியமாகும். —சூக்ஷ்மம்.

விக்னேஸ்வரருக்கு சாங்கோபாங்கமாக அபிஷேகம் செய்து, அபூபம், அவல், பொரி, கரும்பு, மோதகம், லட்டுகம், குளகண்டம், திலகண்டம், பலாப்பழம், மாம்பழம், வாழைப்பழம், பயற்றம் சுண்டல் இவைகளுடன் தேங்காய், வெற்றிலை, பழம் இவைகள் 21 எண் உள்ளதாகவும் இதேபோல புஷ்பங்களும் 21 புஷ்பங்களாலும் விநாயகருக்குப் பூஜை நிவேதனம் முதலிய உபசாரங்கள் செய்யவேண்டும்.

தனுர்மாதபூஜை :

தைமாதம் முதல் ஆறுமாதம் தேவர்களுக்கு பகற்காலம், ஆடிமாதம் முதல் ஆறுமாதம் இரவு ஆகும். ஒவ்வொரு மாதமும் ஐந்து நாழிகை எனக் கொள்ளவேண்டும்.

— காரணகமம்.

कोदण्डस्थे सवितरि प्रत्युषे च शिवार्चनम् ।

— कारणम्

சூரியன் தனுர்ராசிக்குச் சென்றபோது சிவார்ச்சனை செய்ய வேண்டும். — காரணகமம்.

முப்பது நாட்கள் பூஜைசெய்யவேண்டும். அதில் குறைவோ அதிகமோ கூடாது. மாதம் இருபத்துஒன்பது நாளானல்; கார்த்திகை மாதத்திய கடைசி நாளுடன் அல்லது தைமாதத்திய முதல் நாளுடன் சேர்த்து முப்பது நாள் பூஜைசெய்யவேண்டும்.

மார்கழிமாதம் 30 நாட்களிலும் உஷக்காலத்திலும் தைமாதம் 30 நாட்களிலும் பிராதக் காலத்திலும், சித்திரைமாதம் 30 நாட்களிலும் உச்சிக்காலத்திலும், ஆடிமாதம் 30 நாட்களிலும் சாயங்காலத்திலும், ஐப்பசிமாதம் 30 நாட்களிலும் அர்த்தயாமத்திலும் சிவபிரானை விசேஷமாகப் பூஜிப்பது உத்தமம்.

— காரணாகமம்.

தனுர்மாதத்திய உஷக்கால பூஜையின் பொருட்டு அர்த்த ராத்திரிக்குப் பின் விடியற்காலத்திலேயே ஜலம் சேகரித்தல் வேண்டும்.

முதல்நாள் பகலிலேயே புஷ்பங்களை எடுத்துவைத்துக் கொண்டு உஷக்கால பூஜைக்கு உபயோகிக்கவேண்டும். வெண் பொங்கல், தயிரன்னம், ஏலரிசி சேர்ந்த எலிமிச்சம்பழரஸம், வள்ளிக்கிழங்கு, பால், தயிர், நெய், வெல்லம், அதிரஸம் முதலியன நிவேதனம் செய்யவேண்டும். — காரணாகமம்.

மார்கழிமாதத்திய மாதபூஜையில் நெய் அபிஷேகம் செய்ய வேண்டும். மாசபூஜைக்குரிய திரவியங்களில், ஸ்னானம், யோஜனம், லேபனம், தரிசனம் என நான்குவிதமாகும். அதில் ஸ்னானத்திரவியம் இரண்டு, யோஜனத்திரவியம் ஆறு, லேபனத்திரவியம் மூன்று, தரிசனத்திரவியம் ஒன்று ஆக திரவியங்கள் பன்னிரண்டு.

நெய், கருப்பஞ்சாறு இரண்டும் அபிஷேகம் செய்யவேண்டிய திரவியம். க்ருதகம்பளம், அபூபம், அன்னம், சர்க்கரை, மருக்கொழுந்து, பழம் இவைகள் ஆறும் போஜனத்திரவியம், சந்தனம், தயிர், பால் இந்த மூன்றும் லேபனத்திரவியம். தீபம் ஒன்று தரிசன திரவியம். இவ்வாறு மாதபூஜை செய்ய வேண்டும். — அம்சுமான்-

संग्रमे दवमीशानं दृष्ट्वा लिङ्गाकृतिं विभुम् ।
मासेन यत्कृतं पापं त्यक्त यान्ति शिवं पदम् ॥

— त्रलैङ्ग

ஸங்க்ரம காலத்தில் தேவனுய், இலிங்க ஸ்வரூபியாய், விபுவாய் இருக்கிற சிவனைத் தரிசனம்செய்பவன் மாசத்தில்செய்த பாபத்தினின்றும் நீங்கினவராய் சிவபதத்தை அடைகிறான்.

— த்ரலிங்கம்.

மகரமாதத்திய பௌர்ணமியில் கருப்பஞ்சாறு விசேஷமாக அபிஷேகம் செய்யவேண்டும். மாசி மாதத்தில் நெய்யில் நனைத்த கம்பளம் சாத்தி உபசரிக்கவேண்டும்.

மஹாசிவராத்திரி :—

उदयास्तमनं चैव त्रयो दश्या तथैव च ।
रात्रौ चतुर्दशी युक्ता ह्युत्तमा सा विधीयते ॥

சூரிய உதயம் முதல் சூரியாஸ்தமன பர்யந்தம் த்ரயோதசி திதியும் அதற்குமேல் இரவு சதுர்த்தசியும் இருக்கும் சிவராத்திரி உத்தமோத்தமம். — லலிதாகமம்.

अदित्यास्तमये काले त्वस्तिचेद्या चतुर्दशी ।
तद्रात्रिश्शिव रात्रिस्स्यात्साभवे दुत्तमोत्तमा ॥

சூரியாஸ்தமன காலத்தில் சதுர்த்தசியானது வந்துவிடுமேயாயின் அந்த சிவராத்திரி உத்தமோத்தமம்.

उदयाद्युदयान्तं च अहोरात्रं चतुर्दशी ।
मध्यमंतु विधातव्यं पूजयेत्परमेश्वरम् ॥
तद्वत्रयोदशीमिश्र मुत्तमं शिवरात्रिकम् ।
पर्वयुक्ताधमं विद्या च्छिवरात्रि स्सिधामता ॥

— कालोत्तरम्

முதல்நாள் உதயம் முதற்கொண்டு மறுதினம் உதயம் வரையில் பகலிரவு பூராவும் சதுர்த்தசியிருக்குமாயின் அந்த தினத்தில் சிவராத்திரி விரதானுஷ்டானம் பூஜை இவைகள் மத்தியமமாகும். இதுபோல், பகல் பூராவும் த்ரயோதசியும் இரவுபூராவும் சதுர்த்தசியிருந்து அன்று செய்யப்படும் சிவராத்திரி பூஜை உத்தமமாகும். சதுர்த்தசியுடன் அமாவாசை கூடுமானால் அதம சிவராத்திரியாகும்.

— காலோத்தரம்.

(தொடரும்)

செய்திகள்

தருமையாதீனத்தில் :

திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் கண்டு மகிழ்ந்த திருக்கயிலாய தரிசன பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா 22—7—71 வியாழக்கிழமை ஆடி அமாவாசையன்று மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. அன்று ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜை மடத்தில் திருக்கயிலாயத் திருவுருவப் படத்திற்குக் காலை மாலை இருவேளைகளிலும் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நண்பகல் மாகேஸ்வர பூஜையும், இரவு மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளியிரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதியுலாவும் நிகழ்ந்தன. பண்ணிசை வாணர்களால் அகண்டபாராயணமாகத் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப்பெற்றது. இரவு வீதியுலாவில் தக்க பக்க வாத்தியங்களுடன் கயிலைத் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. மாலை 6 மணி அளவில் மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார். திருநெறிச்செம்மல் திரு. வி. சா. குருசாமி தேசிகர், செஞ்சொற்கொண்டல் திரு. சொ. சிங்காரவேலனர். வித்துவான். திரு, வி. சபேசன், வித்துவான், திரு. இரா. செல்வக்கணபதி ஆகியோர் முறையே 'கயிலையும் சேரமானும்' 'கயிலையும் சம்பந்தரும்' 'கயிலையும் அரசும்' 'கயிலையும் சுந்தரரும்' கயிலையும் நக்கீரரும்' என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது அருளால் ஆடிமீ 14௳ (30—7—'71) வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகட்கும் ஏனைய சமயாசாரியர்கட்கும் விசேஷ அபிஷேக

ஆராதனைகளும், ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராண படனமும் நடைபெற்றன.

இரவு வெள்ளையானை வாகனத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், குதிரைவாகனத்தில் ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனரும் திருவீதி உலாவாக எழுந்தருள திருவீதியில் வேத பாராயணமும், அற்புத விளக்கத் தேவார பாராயணமும், அற்புத விளக்கச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

அற்புத விளக்கச் சொற்பொழிவுகளை திரு. சி. அருணை வடிவேல் முதலியார், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனர், M. A., Dip-Ling. வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன், வித்துவான். திரு. இரா. செல்வக்கணபதி, திரு. R. வேலாயுத ஓதுவார், திரு. S. சம்பந்த ஓதுவார் ஆகியோர் நிகழ்த்தினர்.

ஆடிப்பூரம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில், வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வாலாம்பிகைக்கும், சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ திருநிலைநாயகி அம்பாளுக்கும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கும் ஆடிப்பூரத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. 17—7—71 சனிக்கிழமை கொடியேற்றமும், 26—7—71 திங்கட்கிழமை கொடியிறக்கமும் நிகழ்ந்தன. ஆடிப் பூரத்திருநாட்களில் அம்பாள் எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் வழங்கலும், திருத்தேரில் எழுந்தருளலும் தீர்த்தங் கொடுத்தலும் முதலியன நடைபெற்றன. அன்பர்கள் வழிபட்டு மகிழ்ந்தனர்.

திருக்குவளையில் முசுகுந்தார்ச்சனை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 9-8-71 அன்றுமாலை முசுகுந்தார்ச்சனையும் திருமுறைஅர்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றது. திருக்குவளை சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. முசுகுந்தசக்ரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்ற தியாகராஜமூர்த்தங்களில் ஒன்றே இங்கு எழுந்தருளியுள்ள தியாகராஜ மூர்த்தி. இத்தியாகராஜமூர்த்திக்கு முசுகுந்த

சகஸ்ர நாம அர்ச்சனையைச் சிறப்புற நிகழ்த்துவித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். அன்பர்கள் பலரும் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டு வணங்கிப் பிரசாதம்பெற்று மகிழ்ந்தனர். வழிபாட்டின் போது இத்தலத்தின் தேவாரப்பதிகங்கள் ஓதுவாமூர்த்திகளால் ஓதப்பெற்றன.

திருவாரூரில் முசுகுந்தார்ச்சனை

திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களது திருவுளப்பாங்கின்வண்ணம் 9—8—71 திங்கட்கிழமை இரவு நடைபெற்றது. முசுகுந்த சக்ரவர்த்தியினல் எழுந்தருளச் செய்யப்பெற்ற மூர்த்தங்களில் மிகச்சிறப்புடையது இம்மூர்த்தி. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவாரூர்ப்பூங்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளி ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்குநவரத்தினக்கற்கள்வைத்துஇழைக்கப்பட்ட விலைமதிப்புமிக்க தொங்கு மகரகண்டிகையைக் காணிக்கையாக அணிவித்து தரிசித்து மகிழ்ந்தார்கள். பின்னர் திருமூலட்டானப் பெருமானுக்குத் திருமுறை அர்ச்சனை நிகழ்வித்துமற்றும், ஸ்ரீ கமலாம்பிகை, சித்தீச்சரம் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி முதலிய சந்நிதிகளில் வழிபாடு முடித்துக்கொண்டு, முசுகுந்தசகஸ்ர நாம அர்ச்சனை செய்வித்து ஸ்ரீ தியாகராஜப்பெருமானை வழிபட்டு, அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கி ஸ்ரீ தியாகராஜப் பெருமானிடம் மீளா விடைபெற்று மீண்டார்கள்.

முசுகுந்தார்ச்சனை வழிபாட்டை முன்னிட்டு, ஆதீனத்திருக் கோயில்களில் உள்ள ஓதுவாமூர்த்திகள்எல்லோரும் வந்திருந்து தக்க பக்கவாத்தியங்களுடன், திருவாரூர்த் தலத்திற்குரிய திருப்பதிகங்கள் அனைத்தையும் காலை முதல் பாராயணம் செய்தனர். ஆதீன ஓதுவாமூர்த்திகளால் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சந்நிதியில், தருமையாதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அருளிய தக்ஷிணமூர்த்தி திருவருட்பா முறையாக ஓதப்பெற்றன. திருவாரூர்ப்பூங்கோயில் வழிபாட்டிற்கு எழுந்தருளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை, தருமையாதீனம் திருவாரூர் இராஜன்கட்டளை [கட்டளை மடத்தில், பெருமக்களும் பொதுமக்களும் சிறந்தமுறையில் வரவேற்று கொலுவிருத்தி வணங்கி ஆசி பெற்றனர். திருக் கோயிலுக்கு எழுந்தருளியபோது ஆலய நிர்வாகி திரு. கிருஷ்ணசாமி அவர்களும், வடபாதிமங்கலம் திரு. தெக்ஷிண

மூர்த்தி முதலியார் அவர்களும் பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகளுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களை வரவேற்று அழைத்துச்சென்று வழிபாடு செய்வித்தனர். முசுகுந்தார்ச்சனை வழிபாட்டிற்கு, திருவாளர்கள், சிதம்பரம் டாக்டர். K. அரங்கசாமிப்பிள்ளை, திருக்கடவூர் K. கனகசபைப் பிள்ளை, தஞ்சை அறநிலையத்துறை ஆணையர், V. S. கோதண்டபாணி, பக்கிரிசாமிப்பிள்ளை திருவாரூர் முன்சீப் முதலியவர்களும், சைவப் பெருமக்களும், தாய்மார்களும் மற்றும் பலரும் வந்து வழிபட்டு பிரசாதம்பெற்று மகிழ்ந்தனர்.

அன்று திருவாரூர்ப் பூங்கோயில் பூவேலைகள் முதலிய வற்றால் பூங்கோயிலாகவே விளங்கியது. மகரகண்டிகை அணிவிக்கப்பெற்ற தியாகராஜப்பெருமானைக் கண்டு களித்த மக்கள் பலர். அன்று பூங்கோயில் முழுவதும் தெய்வ ஒளிவீசிக் கொண்டு தூய்மையுடன் விளங்கியது மக்களைப் பரவசத்தி லாழ்த்தியது.

ஆதீன சமயப்பிரசாரம்

தலைஞாயிறில் :

6—8—1971 வெள்ளிக்கிழமை, தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கருப்பறியலூர் திருக்கோயிலில் ஸ்ரீ துர்க்கா தேவிக்கு ஆதீன உதவியுடன் பொதுமக்கள் கூடி நிகழ்த்திய இலட்சார்ச்சனை நிறைவு சிறப்பாக நடைபெற்றது. அன்று ஆதீன தேவார பாடசாலை ஆசிரியர் மாணவர்களும், ஆதீனப் புலவர் மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் ஆதீன அலுவலர்களுடன் ஆதீனதேவாலய மடாலய பிரசார வாகனத்தில் சென்று மாலை 6-மணியளவில் திருமுறைப் பாராயணமும், சமயப் பிரசாரமும் நிகழ்த்தினர். சமயச் சொற் பொழிவில் தலவரலாறு, தலப்பெயர். சுவாமி அம்பாள் பெயர் கள் இவற்றின் காரணங்கள், தலத் திருப்பதிக விளக்கம் முதலியவை மக்கட்கு எடுத்துச் சொல்லப்பட்டன. சுவாமி அம்பாள் பெயர்களைப்பற்றிய குறிப்புக்கள் திருப்பதிகத்தில் அமைந்திருத்தல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டன. பொதுமக்கள் பலரும் வந்து வழிபட்டும் கேட்டும் மகிழ்ந்தனர்,

திருக்குவளையில் :

தருமையாதீனம் திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ் தானத்தில், தருமையாதீன தேவாலய மடாலய சமயப் பிரசாரம்

9—8—71 மாலை 5 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. ஆதீன சமயப் பிரசார வாகனத்தில் சமயப்பிரசாரக் குழுவினர் சென்றனர். சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் திருக்குவளை தேவாரத் திருப்பதிகங்களுக்கு விளக்க உரை கூறிச் சமயப்பிரசாரம் நிகழ்த்தினார்கள்.

திருவாரூரில் :

தருமையாதீன தேவாலய மடாலய சமயப் பிரசாரம் திருவாரூர் ஸ்ரீ சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் 9—8—71 திங்கட்கிழமையன்று நிகழ்ந்தது. சமயப்பிரசாரக் குழுவினர், ஆதீன சமயப்பிரசார வாகனத்தில் சென்று சமயப்பிரசாரம் செய்தனர். மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் திருவாரூர்த் தலச்சிறப்பு திருப்பதிகக் கருத்துரை முதலியவற்றை எடுத்துக்கூறி விளக்கினார்கள். பின்னர் அன்று நிகழ்ந்த முசுகுந்தார்ச்சனை வழிபாட்டில் கலந்துகொண்டு தரிசித்தார்கள்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன்கோயிலில் 18—7—71 ல் ஆடிக் கிருத்திகையன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமிக்கு நடைபெற்ற அபிஷேக சந்தனக் குழம்பு பிரசாதமும், அர்ச்சனைப் பிரசாதமும், சென்னை சமயப் பிரசார நிலையத்தில் 17—7—71 மாலை 7 மணிக்கு திருக்கோயில் ஆசிரியர் திரு. என். ஆர். முருகவேள் எம்.ஏ. எம்.ஓ.எல்., அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ் பிரார்த்தனை நிகழ்த்தி அன்பர்கட்கு வழங்கப்பட்டன. திரு. முருகவேள் அவர்கள் தமது தலைமையுரையில் கலியுகவரதனும் கந்தப்பெருமான் என்று எழுதுவது தவறு; எல்லாயுகத்துக்கும் வரதன் கந்தப்பெருமானே ஆதலால், கலியுகத்துக்கும் வரதனும் கந்தப்பெருமான் என்று எழுதுவதே சரியான முறை என்று பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் சொல்லியதை எல்லோரும் நினைவு கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். வித்துவான். திரு. ந. இராமலிங்கம், திரு. எஸ். ஞானப்பிரகாசம் இருவரும் பிரார்த்தனை நிகழ்த்தினார்கள்.

நுங்கம்பாக்கத்தில் மாத வழிபாடு

சமயப் பிரசார நிலையத்தின் 148வது மாத வழிபாடும் சமயப் பிரசாரமும் நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகத்தீசுவரர் ஆலயத்தில் சுவாமி அம்பாளுக்குக் குழுவினரின் அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக் காலத்தில் வித்துவான். திரு. ந. இராமலிங்கம், திரு. என். இராமமூர்த்தி ஐயர் இருவரும் தேவார பாராயணமும், அபிராமி அந்தாதியும் இசையுடன் ஓதி மகிழ்வித்தனர்.

தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் ஆலய அலங்கார மண்டபத்தில் நடைபெற்றது. வித்துவான். திரு. ப. வடிவேல் பிள்ளை, திரு. வி. எல். ஆறுமுகம் பி. காம், இருவரும் வழிபாட்டின் அவசியம் பற்றிப் பேசினர்கள். சுவாமிகள் தமது தலைமையுரையில் இறைவனை நாம் வழிபடுவது இனி நமக்கு வேண்டியவற்றைக் கேட்பதற்காக அல்ல என்றும், இதுவரை நாம் கேளாமலே அவன் நமக்குச் செய்து கொடுத்திருக்கின்ற நன்மைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேதான் நாம் வழிபாடு செய்ய வேண்டும் என்றும், நமக்கு என்னவேண்டும் என்பது இறைவனுக்கே தெரியுமாதலால், வழிபடும்போது எதையும் வேண்டக் கூடாது; இதுவே உண்மையாக வழிபடுவோர் பின்பற்றத் தக்கது என்றும் குறிப்பிட்டார்கள். அறங்காவலரும் சிவாச்சாரியரும் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தார்கள்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசைத் திருவிழா

சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் (30—7—1971) ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழா திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

சுந்தரர் செந்தமிழில் விஞ்சி நிற்பது நட்புணர்வா? பக்தி உணர்வா? என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நடைபெற்றது. நட்புணர்வே என்ற தலைப்பில் திரு. மா. நன்னன், செல்வி. ஆர், சுந்தரவல்லி, திரு. சேஷாத்திரிநாதன் மூவரும் பேசினர். பக்தி உணர்வே என்ற தலைப்பில் திரு. ஞானசுந்தரம் எம்.ஏ., திருமதி. ஆர். இராஜேஸ்வரி, திரு. அம்மையப்பன் மூவரும் பேசினர்.

நடுவர் திரு. கி. வா. ஜகந்நாதன் தீர்ப்பு வழங்குகையில் சுந்தரர் செந்தமிழில் விஞ்சி நிற்பது நட்புணர்வே என்று தக்க காரணம் காட்டித் தீர்ப்புக் கூறினர். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும் நன்றியுரையும் கூறினர்கள். திரு. எஸ். ஞானப்பிரகாசம் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினர்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு வழியனுப்பு வாழ்த்து விழா

இரஷ்யப் பெருநாட்டின் பகுதியாகிய துர்க்மினிஸ்தானின் அழைப்பை ஏற்று கலைப் பண்பாட்டின் தூதுவராக சோவியத் ரஷ்யாவுக்குச் சென்றுள்ள தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கட்குச் சென்னை, தியாகராயநகரில் உள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 17—7—71 சனிக்கிழமை மாலை வழியனுப்பு வாழ்த்து விழா உயர்நீதிமன்ற நடுவர் திரு. எஸ். மகராஜன் அவர்கள் தலைமையிலும், பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது. சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு பெ. திருஞானசம்பந்தம், சைவ சித்தாந்த மகாசமாசத் தலைவர் திரு. கீ. இராமலிங்கனர், திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார், எழுத்தாளர் திரு. அகிலன்' திரு. ஈரோடு தமிழன்பன், திரு. ஔவை. நடராசன், காட்டூர் திரு. கே. வி. இராமையா ஆகியோர் தவத்திரு அடிகளார் மேற்கொண்டுள்ள ரஷ்ய சுற்றுப்பயணம் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தத்துவ நெறிக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து புத்துணர்வையும் பொலிவையும் வளர்க்கும் என்று பாராட்டி வாழ்த்தினர்கள்.

தருமையாதீனச் சார்பில் அமைச்சர் மாண்புமிகு இராசாராம் அவர்கள் அடிகளாருக்குப் பொன்னடை போர்த்திப் பாராட்டினர்கள். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தமிழறிவு மிக்கவர், ஆங்கில அறிவு பெற்றவர், வள்ளுவத்திலும் தேவாரத்திலும் திருவாசகங்களிலும் ஆழ்ந்த புலமை மிக்கவர், தமிழ்நாடு முழுவதும் தெரிந்தவர், தமிழ் மக்கள் உள்ளத்தை அறிந்தவர், இவர்களின் கடல்கடந்த பயணத்தால், இரஷ்ய நாட்டுச் சுற்றுப் பயணத்தால் தமிழ்க் கலையையும், சமய தத்துவங்களையும் அவர்கட்கு அறிவித்துத் தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தருவார்கள் என்பதில் ஐயமில்லை. சமயக் கோட்பாடுகளில் மாறுபட்ட கொள்கையுடைய ரஷ்யாவில் நம் சமயக்கலை, பண்பாடுகளில் ஊறித் திளைத்த அடிகளாரை அந்த நாடு அழைத்திருக்கிறது.

இந்த நிலை அடிகளாரின் சிறப்பை நமக்கு எடுத்துக்காட்டு கிறது. இத்தகைய அடிகளார் ரஷ்யாவில் பெரும் புகழும் பெற்றுத் தமிழகத்தின் சீரும் சிறப்பும் ஓங்கச்செய்து வருவார்கள் என்று வாழ்த்தி வழியனுப்புகிறேன்.

தலைவர் திரு. மகராசன் அவர்கள் "சைவ ஆதீனம் குருமார் களாக இருப்பவர்கள் கடல் கடந்து வெளிநாடு சென்று நம் கருத்துக்களை அவர்கட்கு அறிவித்து, அவர்களிடத்துள்ள நற் பண்புகளைத் தெரிந்துவர தவத்திரு அடிகளார்தான் முதலில் துணிந்து செல்கிறார்கள், எளிமையும், அறிவுத் தெளிவும், நாவன்மையும் படைத்தவர்கள். மேலும் துணிச்சல் மிக்கவர்கள்; நல்ல பரம்பரையில் உதித்தவர்கள். இவர்கள் சுற்றுப்பயணத் தால் தமிழ் நாட்டின் பண்பும் பெருமையும் ரஷ்ய நாடு நன்கு தெரிந்துகொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சென்று சிறப்புடன் வருக என்று வாழ்த்துகிறேன்" என்றார்கள்.

பிறகு தவத்திரு அடிகளார் ஆசியுரை கூறினார்கள். கொண்டும் கொடுத்தும் பணி செய்வதைத்தான் நாயன்மார்கள் தமக்குக் காட்டியுள்ளார்கள். நம் கருத்தை வெளியவர்க்கும், வெளியவர் கருத்தை நாமும் பகிர்ந்து கொள்ளுவதுதான் சுற்றுப் பயணத்தால் விளையும் பலனாகும். ஆனால் எல்லாவற்றை யும் கொள்ளவும் முடியாது, தள்ளவும் முடியாது. திருவள்ளுவர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், அறிவித்துள்ள அருட் செல்வங்களை உலக முழுதும் எடுத்துச் சென்று பரப்ப பன் மொழிப் புலமை மிக்க துறவிகள் இத்தமிழ்நாடு தெய்வீகப் பேரவையின் மூலம் தயாரித்து உலக நாடுகட்கு அனுப்ப எண்ணம் உண்டு: தமிழ்நாடு அரசும் இதற்குத் துணை செய்யும் என்று நம்புகிறோம். தருமையாதீனம் எனக்குத் தாய்வீடு. என்னை உருவாக்கிய பெருமை தருமைக்குருமணி அவர்கட்கு உண்டு. தாய் சேயைப் பாராட்டி வழி அனுப்புவதாகவே இவ்வாழ்த்துக்களை ஏற்கிறேன். விழாவில் பங்குகொண்ட எல்லோருக்கும் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்கள்.

தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற் புரையும் நன்றியுரையும் கூறினார்கள். இசையரசு திரு. எம். எம். தண்டபாணி தேதிகர் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்கள்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்
திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுவு ஆவணிமீ 1௳ முதல் 31௳ முடிய)
(17—8—71 முதல் 16—9—71 முடிய)

ஷை ஆவணி மாதம் முதல்தேதி பகல் 3-ம் ஜாமத்தில் செவ்வாயன்று 17 நாழிகை 23 விநடிக்கு லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான், சிம்மராசி பிரவேசம் செய்கிறார். பிரவேச கால லக்கினம் விருச்சிகம். அதில் குருசஞ்சாரம், அதனுடைய பலன் தக்ஷிணபூமி அங்காரகனுடைய பார்வை உடைய ஸ்தலங்கள் சுபிக்ஷத்தைத்தரும். மற்ற பிரதேசங்களில் விவசாய காரியங்களுக்குத் தவக்கமும், விக்னமும் உண்டுபண்ணும். ஏதாவது அபசகுனங்கள் ஏற்பபட்டுக்கொண்டே இருக்கும்.

மேலும். குறிப்பாக சுக்கிரனுக்கு ஒரேமாதத்தில் மூன்று ராசிகளில் கடகம், சிம்மம், கன்னி இதுகளில் சஞ்சாரமும், அங்காரகன் வக்ராதிசாரத்துடன் ஸ்தம்பகதியும் அடைவதால், உலகில் பலமாறுதல்களும் அமைதிக்குறைவும், துர்மரணங்களும் துர்பிக்ஷமும், பல தேசங்களில் யுத்த பயமும், உண்டாகுமாதலால். ஆஸ்தீக சத்ஜனங்களும், உலக க்ஷேமத்தையே முக்கியமாகப் பிரார்த்திக்கும் பெரியோர்களும், தனவந்தர்களும் ஆங்காங்கு உத்பாத கிரஹ சாந்திகளால் தேவ கோபத்தைப் தணியச்செய்து பிருதிவி சாந்தி அன்னபூர்ண ஹோமத்தால் துர்பிக்ஷ நிவாரணம் செய்து, செய்வித்து எங்கும் ஒரேமாதிரியாக அமைதியுடனும், சுபிக்ஷத்துடனும் சகல ஜனங்களும் ஆஸ்தீகத்துடனும் சதா தெய்வசிந்தையுடனும் இருந்துகொண்டு மனுஷ்ய சுபாவத்தை மறக்காமல் அவரவர்கள் கடமைகளைச் சரியாய் நடத்திக்கொண்டுவர கருணாமூர்த்தியாகிய ஸ்ரீ பகவான் கலிபலத்தை ஓடுக்கி இக்கலியிலேயே இன்னும் வெகுகாலத்துக்கு தர்மராஜ்யத்தைத் தந்து உலகத்தை ரக்ஷிப்பார். சுபமுண்டாகும்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். அடிக்கடி சஞ்சாரமும் இடம் மாறுதலும் ஏற்படும். பொருளாதாரத்தில் கவலையைக் காட்டும். வெகுகாலமாக எதிர்பார்த்து நடவாத காரியங்கள் நடைபெறும். செவ்வாய், புதன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் பூர்ண சுபத்தைத்தரும். விவாகாதி சுபகாரியங்கள் ஏற்படும். ஸ்திர ஜீவனம் உண்டாகும். வித்யை விருத்தியாகும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும்: வியாதி நிவர்த்தியாகும். அடிக்கடி பந்துமித்ராளுடைய சேர்க்கையும் மேலோர், பெரியோர்களுடைய அன்பும் ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். வெகு காலமாக எதிர்பார்த்து நடக்காத காரியங்கள் எல்லாம் சுலபமாக நடக்கும். விவசாய விருத்தியும், கிரய விக்ரயங்களும் ஏற்படும். கடன் நிவர்த்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஸ்திர ஜீவனம் ஏற்படும். தொழில் வியாபாரம்' ஓங்கும். புதிதாக பிரபுக்களின் சிநேகமும், புதிதாகத் தொழில் பழக்கங்களும் ஏற்படும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தேவபிதுரு காரியங்கள் அதிகமாகும். ஆரோக்யம் உண்டு பண்ணும். ஈதிபாதைகள் இருந்துகொண்டே இருக்கும். சகல காரியங்களும் தவக்கத்துடன் நடந்துகொண்டு இருக்கும். குடும்பம் ஓங்கும். தெய்வபலம் முன்நின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூரணமாக சுபத்தைத்தரும். ஜீவனம் ஓங்கும். தேவகாரியங்களும், ஸ்திர ஜீவனமும் ஏற்படும். அடிக்கடி சஞ்சாரமும், குடும்ப விருத்தியும், ஏற்படும். சகல காரியங்களும் நன்மையாக நடந்துகொண்டு இருக்கும். தெய்வ பலம் காக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். தொழில் சம்பந்தமாய் பல கவலைகள் உண்டுபண்ணும். எதிர் பாராத அநேகவிதமான இடைஞ்சல்களும் ஏற்படும். வரவு, செலவு சமமாக இருக்கும். தெய்வபலம் உள்ளவர்களுக்கு சிரமங்கள் அதிகம் பாதிக்காது. செவ்வாய். புதன் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். விவகாதி சுபங்கள் ஏற்படும். இடம் மாறுதல்களுடன் தொழில் விருத்தி யாகும். பந்துமித்ராளுடைய ஆசௌசம் ஏற்படும். புத்திராதி களால் நன்மை உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். அதிக அலைச்சல்களும் ஆரோக்யக்குறைவும் ஏற்படும். சில நண்பர் களாலே சிரமம் ஏற்படும். செலவுகள் அதிகமாகும். மேலோர், பெரியோர்களின் அன்பு உண்பாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வியாதி நீங்கும். ஆரோக்யம் உண்டாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். புதிதாக வஸ்திராபரண சேர்க்கைகளும், புத்தி ராதிகளால் நன்மையும் ஏற்படும், திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனைத் தரும். ஜீவனம் ஓங்கும், வித்யா விருத்தியாகும். ஆரோக்யம் உண்டு பண்ணும். மேலோர், பெரியோர்களின் அன்பினாலும், தெய்வ பலத்தாலும் சகலமான காரியங்களும் சித்தியாகும். புதன், வியாழன் சுபமாகும். சுபம்.

தருமையாதீனம் வேளூர் தேவஸ்தானம்

இலவச சித்த வைத்திய சாலை

இசிவு (Convulsion)

டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

குழந்தைகளுக்கு காணுகின்ற ரோகங்களில் மிகவும் கஷ்ட மானதும், அதி ஜாக்கிரதையாக கையாளக்கூடியதுமான இசிவு ரோகத்திற்குப் பரிகாரம் காணுவது மிக அவசியம்.

காரணங்களும், அறிகுறிகளும் :-

இசிவானது இளம் குழந்தைகளுக்குப் பல காரணங்களாலும் அனேக ரோகங்களாலும் பிறக்கின்றது.

பிரசவம் ஆகும் போதே மூளையில் ஏற்படக்கூடிய அதிர்ச்சி, அதிக குளுமை, சிரசு உதயமாகி வெகுநேரம் கழித்து பிரசவித் தல் ஆகிய காரணங்களாலும், பல் முளைத்தல், இரைப்பையில் அதிக உஷ்ணத்தினால் கொதிப்பு உண்டாகுதல், கருபையிலேயே வியாதி காணுதல், மூத்திரப்பையில் கல் அடைத்திருத்தல் ஆகிய பல காரணங்களினால் மேற்படி இசிவு ரோகம் ஏற்படுகின்றது.

ஒருவயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு தகாத உணவும், ஜீரணிக்க முடியாத உணவுகள் உட்கொள்வதாலும், வயிற்றில் நாக்குப்பூச்சிகள் இருந்தாலும், மலேரியா, விஷ சுரம், முதலிய அதிக சுரத்தினாலும், பேதி அதிகமானாலும் சிறு குழந்தைகளுக்கு இழுப்பு மாந்தம் உண்டாகலாம். இவ்வித மாந்த இசிவு உண்டாகும் போது முகம், கை, கால்களில் உள்ள தசைகள் சுண்டி, சுண்டி விட்டு விட்டு இழுக்கும், கால்களும் கோண கோண இழுக்கும். முகம் வெளுத்து கண்கள் நிலைத்து நிற்கும். தலை சரிவர நிற்காது. இரண்டு விலாஎப்பக்கமும் மேலும் கீழும் அசைந்து மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டிருக்கும்.

சிகிச்சை :-

இவ்வியாதிக்கு சிகிச்சை செய்யும்போது இது வருவதற்கு ஏற்ற காரணத்தை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். உடனே பேதிக்குக் கொடுத்து மலத்தைக் கழிக்க வேண்டியது அவசியம். சிரசை குளிர்ச்சி செய்வதும் அவசியம். கை, கால் களுக்கு வேப்ப எண்ணெய் முதலிய உஷ்ணகாரி மருந்துகளைத்

தடவி ஒத்தடம் கொடுக்கலாம். கடுகு அரைத்துப் பத்து போடலாம். சூடுள்ள தண்ணீரை ஓர் தொட்டியில் விட்டு குழந்தையை அதனுள் வைக்கலாம். சிரசில் குளிர்ந்த ஜலத்தை வைத்திருப்பது நல்லது. பெரும்பாலும் பிறந்த குழந்தைக்கு இசிவு கண்டால் அக்குழந்தை பிழைப்பது அரிது. அந்த குழந்தைகளுக்குப் பிடரியிலுள்ள நரம்புகளையும் புருவ மத்தியிலுள்ள நரம்புகளையும் நன்ருக அழுத்தித் தேய்த்துவந்தால்இசிவு ஓரளவு நின்றுவிடும்.

முட்டையிலுள்ள மஞ்சள் கருவை எடுத்து கரண்டியில் விட்டு நன்ருக கிண்டிவந்தால் அதிலிருந்து தைலம் இறங்கும். அத்தைலத்துடன் சரிபாதி வேப்ப எண்ணெய் கலந்து தினம் ¼ கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்துவந்தால் இசிவு மாந்த கணை ஓரளவு கட்டுப்படும்.

பேய்மிரட்டி இலை, ஆடாதொடை இலை, நொச்சியிலை, குப்பைமேனி இலை, சங்கன் இலை, துளசி இலை, இவைகளை சம அளவுஎடுத்து கஷாயம் இட்டு தினம்இரண்டுவேளைஒருடீஸ்பூன் வீதம் கொடுத்து வந்தால் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் காணுகின்ற ரோகங்கள் நிவர்த்தியாகும்.

கஸ்தூரி, கோரோஜனை ஒவ்வொன்றும் அரிசி எடை வீதம் எடுத்து தேனில் மத்தித்து தினம் இருவேளை கொடுத்து வந்தாலும் வியாதி கட்டுப்படும்.

வேப்ப எண்ணெயில் சுக்கு, பூண்டு, பெருங்காயம், வேளைப் பூ, இவைகளை அரைத்துப் போட்டு நன்ருகக் காய்ச்சி அதைக் கை, கால், விலாப்பக்கம் தடவி ஒத்தடம் கொடுப்பது நல்லது.

நோயாளிகள் குறிப்பு

Dr. Miss. Vatsala Gopalakrishnan, M. B., B. S.
M. S/R. B/III $\frac{6}{8}$ Rly Qrs. KOLWADA,
Bombay-22
12—7—71.

Dear Doctor,

I am taking both the medicines regularly and I find great improvement in my pimples. Thank you very much. The medicines you had sent will last for only

three more days If you think, I should take another course, will you please send the medicines as soon as possible? I am extremely sorry to give you trouble again and again. Even though my skin has improved a lot, It is not yet completely clear for which I think it will take some more time.

Thanking you,

Yours faithfully

(S. D.)

Vatsala Gopalakrishnan.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

I had the good oppertunity of coming to this temple today along with other members of Bagavan Sri Sathya Sai Baba Samithi of Kumbakonam branch.

The first thing, that everyone is to get, the best impression about the neat maintenance of the temple and this makes one to get purity in mind, immediatly on entering the temple premises. Secondly, every member of the staff employed in the Devasthanam office, I find, takes it as a pleasure to receive the devotees and take them round and explain the great significance of the lord Sarabeswarar. One must realy be fortunate to have the oppertunity to visit the temple.

Dharmapuram Adhinam deserves all praise for the neat maintenance of the temple.

(Sd.) Lakshmana Rao,

Spl. Thasildar (R T R)

1—8—71. Kumbakonam.